# வலம்புரி

VALAMPURI

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | மாசி 21 புதன்கிழமை (05.03.2003) | தொலைபேசி~ 2223378 | ஒலி 76



ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT


## மன்னார்க் கடலில் அத்துமீறி நுழைவு

# தமிழ்நாட்டு மீனவர்களுடன் மன்னார் மீனவர்கள் மோதல்!

## 17 தமிழக மீனவர்கள் படுகாயம்; 108 பேர் பொலிஸில் ஒப்படைப்பு

(மன்னார் நிருபர்)

**மன்னார்க் கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடிப்பதற்கு 32 படகுகளில் வந்த 125 இந்திய மீனவர்களை மன்னார் மீனவர்கள் பிடிப்பதற்கு முற்பட்டபோது ஏற்பட்ட மோதலில் 17 இந்திய மீனவர்கள் படுகாயமடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

தமிழகத்தைச் சேர்ந்த சுமார் 125 மீனவர்கள் 32 இழுவைப் படகுகளில் நேற்றும் நேற்று முன் தினமும் இரவுவேளை மன்னார்க் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த வேளை அவர்களை மன்னார் மீனவர்கள் சுற்றி வளைத்துப் பிடிக்க முற்பட்ட போது ஏற்பட்ட மோதலில் 17 தமிழக மீனவர்கள் படுகாயமடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலையில் பொலிஸாரினால் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 108 மீனவர்களை மன்னார் பொலிஸாரிடம் மன்னார் மீனவர்கள் ஒப்படைத்துள்ளதுடன் படகுகளையும் கைப்பற்றியுள்ளனர்.

இச் சம்பவத்தினால் தமிழக மீனவர்களில் ஒரு பகுதியினர் காயமடைந்த நிலையில் இராமேஸ்வரத்திற்குத் தப்பியோடினர். காயமடைந்த மீனவர்கள் இராமேஸ்வரம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனையடுத்து இராமேஸ்வரம் பகுதியில் பதற்றம் நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

## மன்னார்ச் சம்பவத்தால் தமிழகத்தில் பதற்றம்

### ஈழ அகதிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு

(சென்னை)

தமிழ் நாட்டிலுள்ள ஈழத் தமிழ் அகதிகள் தங்கியிருக்கும் அகதி முகாம்களுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மன்னார்க் கடலில் இந்திய மீனவர்கள், மன்னார்ப் பகுதி மீனவர்களால் தாக்கப்பட்டதையடுத்து தமிழ்நாட்டில் கொந்தளிப்பு ஏற்பட்டிருப்பதால் பழிவாங்கும் நடவடிக்கையாக ஈழத்தமிழர்கள் தங்கியிருக்கும் அகதிமுகாம்கள் தாக்கப்படலாம் என்று அஞ்சப்படுகிறது.

இதனையடுத்தே தமிழ் நாட்டிலுள்ள அகதி முகாம்களுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (இ)

## தமிழக மீனவர்களை விடுவிக்க நிதியமைச்சர் நடவடிக்கை

### இந்தியப் பாராளுமன்றத்தில் தெரிவிப்பு

(புதுடில்லி)

மன்னார் கடற்பரப்பில் தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பாக மன்னார் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிப்பதற்காக இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் இந்திய மத்திய நிதியமைச்சர் ஜஸ்வத்சிங் நேற்று இந்தியப் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மன்னார் கடற்பரப்பில் நேற்றும் நேற்று முன்தினமும் தமிழக மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரினால் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கும் போதே நிதிஅமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (வ)

## சிறுவர்களின் உரிமை விவகாரம்

## யுனிசெவ்-புலிகள் சந்திப்பு கூட்டறிக்கை வெளியீடு

(கிளிநொச்சி)

தமிழர் தாயகப் பகுதியில் கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் அபிவிருத்தி நடவடிக்கை தொடர்பாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் யுனிசெவ் பிரதிநிதிகளும் நேற்றுப் பேசி உடன்பாடொன்றிற்கு வந்துள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் நடுவப் பணியகத்தில் நேற்றுப் பகல் நடைபெற்ற இச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் யுனிசெவ்வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி றொரக்கைலன்ட் மற்றும் வன்னிப் பிரதேச வதிவிடப் பிரதிநிதி ரெணிபுறாவ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

யுனிசெவ்வுடன் மேற்கொள்ளப்படவுள்ள சிறுவர் அபிவிருத்தி தொடர்பில் மீண்டும் எதிர்வரும் 10ம் திகதி திங்கட்கிழமை இருசாராரும் சந்தித்து திட்ட வரைபொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இதேவேளை யுனிசெவ் அமைப்புடன் இடம்பெற்ற சந்திப்புக் குறித்து யுனிசெவ் அமைப்பும் விடுதலைப் புலிகளும் நேற்றுக் கூட்ட முடிவில் கூட்டறிக்கை

(10ம் பக்கம் பார்க்க)

## நோர்வேயின் தூதுவருடன் முஸ்லிம் பிரதிநிதிகள் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கை முஸ்லிம் அரசியல் கட்சிப் பிரமுகர்கள் நேற்றுச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர்.

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமை மற்றும் அபிலாசைகள் குறித்து ஆராய்வதற்கு தனித்தரப்பு அனுமதி வழங்க வேண்டும் என்பது குறித்து நேற்றைய பேச்சுக்களின் போது முஸ்லிம் தரப்புப் பிரநிதிகள் எடுத்துக் கூறியுள்ளனர்.

தூதுவர் வெஸ்பேர்க்கின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பில் முஸ்லிம் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ராவூப் ஹக்கீம், தேசிய ஐக்கிய முன்னணித் தலைவி பேரியல் அஸ்ரப், அமைச்சர் நூர்தீன் மசூர், பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம்.ஹப்ரக், அன்வர் ஸ்மையில், ஹரிஸ் மற்றும் ஹிஸ்புல்லா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை முஸ்லிம் பிரமுகர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட தூதுவர் அது குறித்து சம்மந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சு நடத்தி பொது முடிவொன்றை எட்டப்படுவதாக உறுதியளித்தார் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார். (இ)

## நோர்வேப் பிரதிநிதி நேற்று யாழ்.வருகை

### மனிதநேய அமைப்புக்களுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

நோர்வே அரசின் பிரதிநிதியாக ஒஸ்லோப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் அஸ்ரிட் நொக்கைபேர்க் நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தார்.

யாழ்ப்பாணம் வந்த இவர் பிற்பகல் 4 மணியளவில் யாழ் மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டார்.

அவருடன் யாழ் மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி போல் எரிக்கும் கலந்து கொண்டார்.

வைத்திய கலாநிதி வை.தியாகராசா தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் யாழ் குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டது.

ஏ-9 பாதை திறந்த பின்பும் பொருட்களின் விலை உயர்வடைந்துள்ளமை, வைத்தியசாலைகளில் வைத்தியர் பற்றாக்குறை, சிறுவர்களின் போசாக்கு, யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்கள், மக்களின் இயல்பு வாழ்க்கைப் பாதிப்பு மற்றும் பெண்களின் அபிவிருத்தி குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன் நோர்வேப் பிரதிநிதிக்கும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

மேற்குறித்த விடயங்களை தெளிவாகக் கேட்டறிந்து கொண்ட நோர்வேப் பிரதிநிதி அவ் விடயங்கள் குறித்து இன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ள உப குழுக் கூட்டத்தில் வெளிப்படுத்துவதாகக் கூறினர். (இ-7)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**








# உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றும் தென்னாபிரிக்காவின் கனவு தவிடுபொடி!

## சோகம் ததும்ப அணித்தலைவர் பொலக் பேட்டி



உலக் கிண்ணச் சுற்றுப் போட்டியில் இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக் கிடையான ஆட்டம் மழை காரணமாக சமநிலையில் முடிவுற்றமை தெரிந்ததே. இதன் மூலம் இத்தடவையாவது உலகக் கிண்ணத்தைக் கைப்பற்ற வேண்டுமென்ற தென்னாபிரிக்க அணியின் நீண்டநாள் கனவு தவிடு பொடியானது.

இவ்வாட்டத்தின் பின்னர் தென்னாபிரிக்காவின் அணித் தலைவர் ஷோண் பொலக் சோகம் படிந்த முகத்துடன் பேட்டி அளிக்கையில், இலங்கை அணியுடனான போட்டியில் இறுதி நிமிடத்தில் மழை குறுக்கிடும் வரை, நாம் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு (சுப்பர் சிக்ஸ்க்கு) தகுதி பெறுவோம் எனவும் அதனைத் தொடர்ந்து வரும் ஆட்டங்களில் வெற்றிபெற்று உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றுவோம் எனவும் நம்பியிருந்தோம். ஆனால் அந்த எதிர்பார்ப்பு-நம்பிக்கை மீண்டும் ஒருமுறை தவிடு பொடியானது.

இச் சுற்றுப் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகளுடனான முதலாவது ஆட்டத்தில் மேலும் ஒரு பந்துப் பரிமாற்றம் இருந்திருந்தால் நிச்சயமாக 4 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியிருப்போம். இவ்வாறே இலங்கை அணியுடனான ஆட்டத்திலும் 30 பந்துகளை எதிர் கொண்டு 40 ஓட்டங்களைப் பெறுவது என்று களத்தில் நின்ற உபதலைவர் மார்க் பௌச்சர் மற்றும் அதிரடி நாயகன் லான்ஸ் குளூஸ்னர் ஆகியோரைப் பொறுத்தவரையில் பெரிய விடயமல்ல.

ஒவ்வொரு உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியிலும் சுப்பர் சிக்ஸ்க்கு இதுவரை தகுதிபெற்ற நாம் இம் முறை எமது சொந்த மண்ணிலேயே சுப்பர் சிக்ஸ்க்கு தகுதிபெற முடியாது விதி சதி செய்துவிட்டது என்றார். உண்மையில் இவ்வாறான துர்ப்பாக்கிய நிலை எமக்கு மட்டுமல்ல உலகில் வேறு எந்தவொரு அணிக்கும் ஏற்படக்கூடாது. ஆயினும் எமது உலகக் கிண்ணக் கனவை என்றாவது ஒருநாள் நிச்சயமாக நனவாக்குவோம் என்றார்.

இதேவேளை சுப்பர் சிக்ஸ்க்கு இலங்கை, கென்யா, நியூசிலாந்து ஆகிய அணிகள் இலகுவாக முன்னேறிவிட்டன. ஆனால் சுப்பர் சிக்ஸ்க்குள் நுழையுமென எதிர் பார்க்கப்பட்ட தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் மண் கவ்வின. ஏ பிரிவில் அவுஸ்திரேலியா, இந்தியா, சிம்பாப்வே ஆகிய அணிகள் சுப்பர் சிக்ஸ்க்கு தகுதி பெற்றுள்ளன.

(த-55)

### ஏ பிரிவு

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வ் | புள்ளி |
|---|---|---|---|---|
| அவுஸ்திரேலிய | 6 | 6 | 0 | 24 |
| இந்தியா | 6 | 5 | 1 | 20 |
| சிம்பாப்வே | 6 | 3 | 2 | 14 |
| இங்கிலாந்து | 6 | 3 | 3 | 12 |
| பாகிஸ்தான் | 6 | 2 | 3 | 10 |
| நெதர்லாந்து | 6 | 1 | 5 | 4 |
| நமீபியா | 6 | 0 | 6 | 0 |

### பீ பிரிவு

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வ் | புள்ளி |
|---|---|---|---|---|
| இலங்கை | 6 | 4 | 1 | 18 |
| நியூசிலாந்து | 6 | 4 | 2 | 16 |
| கென்யா | 6 | 4 | 1 | 16 |
| தென்னாபிரிக்கா | 6 | 3 | 3 | 14 |
| மேற்கிந்தியத் தீவுகள் | 6 | 3 | 2 | 10 |
| கனடா | 6 | 1 | 5 | 4 |
| பங்களாதேஷ் | 6 | 0 | 5 | 2 |

## உலகக் கிண்ணக் கிரிக்கெற் - 2003

### மேற்கிந்தியத் தீவுகள் எதிர் கென்யா

#### மேற்கிந்தியத் தீவுகள்

50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 246 ஓட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| கைல் | c ஒபுயா | b அங்கரா | 119 (151) |
| சந்ரபோல் | c அங்கரா | b ஒபுயா | 66 (72) |
| லாரா | c ஒபுயா | b டிக்கோலோ | 10 (30) |
| சாமுவேல் | c பட்டேல் | b ஒடும்பே | 14 (17) |
| பெவல் | c ஒற்றோனா | b ஒடும்பே | 8 (6) |
| கூப்பர் | st ஒற்றோனா | b அங்கரா | 6 (6) |
| கென்ஸ் | b சுஜீ | | 10 (9) |
| ஜேக்கப்ஸ் | Not out | | 9 (8) |
| டிரக்ஸ் | Not out | | 1 (1) |

உதிரிகள் –3

#### பந்து வீச்சு -கென்யா

| | | | |
|---|---|---|---|
| எ.சுஜீ | 10 | 38 | 1 |
| அங்கரா | 7 | 53 | 2 |
| ஒன்கோன்டோ | 5 | 17 | 0 |
| ஒடும்பே | 10 | 62 | 2 |
| ஒபுயா | 10 | 48 | 1 |
| டிக்கோலோ | 8 | 28 | 1 |

#### கென்யா

35.5 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 104 ஓட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| ஒற்றோனா | c டிலோன் | b டிரக்ஸ் | 3 (16) |
| சாக் | c கைல் | b டிலான் | 12 (22) |
| பட்டேல் | c லாரா | b டிரக்ஸ் | 11 (30) |
| றிகோலோ | lbw | b டிரக்ஸ் | 12 (27) |
| மோடி | c ஜேக்கப்ஸ் | b டிரக்ஸ் | 0 (1) |
| ஒடும்பே | Hit Wicket | b லோசன் | 0 (2) |
| டி.ஓ.ஒபுயா | c பெவல் | b டிரக்ஸ் | 4 (6) |
| சி.ஒ.ஒபுயா | c பெவல் | b லோசன் | 13 (35) |
| ஒன்கோன்டோ | b பெவல் | | 24 (43) |
| எ.சுஜீ | c சந்ரபோல் | b கைன்ஸ் | 13 (32) |
| அங்கரா | Not out | | 0 (2) |

உதிரிகள் - 12

#### பந்து வீச்சு - மேற்கிந்தியத் தீவுகள்

| | | | |
|---|---|---|---|
| டிலோன் | 10 | 31 | 1 |
| டிரக்ஸ் | 10 | 33 | 5 |
| பெவல் | 4 | 2 | 1 |
| சந்ரபோல் | 2 | 6 | 0 |
| கென்ஸ் | 1.5 | 7 | 1 |



இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்துடன்
இணைந்து
வலம்புரி
நடாத்தும் மாபெரும் கிரிக்கெற் பரிசுப்போட்டி
போட்டியில் பங்கு பற்றுங்கள்
பெறுமதியான பரிசை வெற்றி
கொள்ளுங்கள்
1) இம்முறை உலகக்கிண்ணத்தை வெல்லும் அணி எது?
2) இப் போட்டியின் சகலதுறை ஆட்டக்காரர் யார்?
உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி
கிரிக்கெற் பரிசுப் போட்டி
வலம்புரி
இல 15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டி - 2003
முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
தே.அ.அ.இல : ..............................
கையொப்பம்: ..............................
அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி
மார்ச் 15, 2003

# தரம்-5 புலமைப்பரிசில்
## பயிற்சி வினாத்தாள்
### வினா இல : 06

*** கீழ்வருவனவற்றை கவனமாக வாசித்து விளங்கிக் கொண்டு சரியான விடையைத் தெரிவு செய்க.**

A: - பாபு வாழைப்பழத்தோலைக் கீழே போடாதே
B : - நீ எனக்கு புத்தி சொல்லத் தேவையில்லை
A :- நான் உனது நன்மைக்காக மட்டுமல்ல எல்லோரது நன்மைக்காவும் தான் சொல்கின்றேன்.
C :- குகன் பாபுக்குப் புத்தி சொல்லப் போகாதே

01. இங்கு விபரிக்கப்பட்டிருப்பது
1. தொலைபேசி உரையாடல் 2. தொலைக்காட்சி நாடகம்
3. மாணவரிடையேயான உரையாடல் 4. பெரியவர்களின் சண்டை
02. இங்கு "A" என்பவருக்கு பொருந்தக்கூடிய பெயர்
1. பாவு 2. குகன் 3. வரன் 4. கூறமுடியாது
03. இங்கு "B" என்பவருக்கு பொருந்தக்கூடிய பெயர்
1. பாவு 2. குகன் 3. வரன் 4. கூறமுடியாது
04. இங்கு "C" என்பவருக்கு பொருந்தக்கூடிய பெயர்
1. பாவு 2. குகன் 3. வரன் 4. கூறமுடியாது
05. "நன்மை" என்னும் சொல்லின் ஒத்த கருத்துடைய சொல்
1. தீமை 2. நலம் 3. ஆசை 4. தேவை
06. இங்கு "புத்தி சொல்லுதல்" என்பதன் பொருள்
1. அறிவு புகட்டுதல் 2. ஆலோசனை சொல்லுதல்
3. சண்டை செய்தல் 4. கூடிக்கதைத்தல்
07. சொல்கின்றேன் என்னும் சொல் என்ன காலத்தில் அமைந்துள்ளது.
1. இறந்தகாலம் 2. நிகழ்காலம்
3. எதிர்காலம் 4. கூறமுடியாது
08. "வாழைப்பழம்" என்னும் சொல்லை பிரித்து எழுதினால்
1. வாழை+பழம் 2. வாழைப்+பழம்
3. வா+பழம் 4. வாழை+பழங்கள்
09. வாழைப்பழத்தோலைக் கீழே போடுவதால் நடைபெறுவது என்ன?,
1. புதிய வாழை மரம் தோல் போடுமிடங்களில் எல்லாம் உருவாகும்
2. போடுமிடமெல்லாம் தோலால் அசுத்தமடையும்
3. வாழைப்பழத்தோலை உண்ண ஆடுகள், காகங்கள் வரும்
4. வாழைப்பழத்தோல் ஈரலிப்பானது வழுக்கும். இதனால் விபத்துக்கள் நிகழலாம், சூழல் அசுத்தமடையலாம்
10. 'நீ' என்பதன் பன்மைச் சொல்
1. நாங்கள் 2. நீங்கள் 3. அவர்கள் 4. அவைகள்


*** கீழே உள்ள வாக்கியங்களில் சொற்கள் சில தவறாக எழுதப் பட்டுள்ளன. அவற்றைத்திருத்தி சரியான முறைப்படி எழுதுக.**

11. சந்தையில் பழங்களை வேண்டினேன்.
....................................................................................
12. பாடசாலைக்கு மாணவர் பலர் சமுகமளிக்கவில்லை.
....................................................................................
13. நாய் குலைத்தது
....................................................................................

*** தரப்பட்டுள்ளவற்றுள் பொருத்தமான எழுவாய் கொண்டு இடைவெளியை நிரப்புக.**
**குயில்கள், கமலி, ஆமை**

14. ........................................ உரத்த குரலில் இனிமையாக கூவின.
15. ........................................ அரங்கத்தில் அழகாக ஆடினாள்
16. ........................................ முயலுடன் போட்டி போட்டு வென்றது.

*** அருகே காட்டப்பட்டுள்ள தாவரத்தில் ஆங்கில எழுத்துக்களால் குறிப்பிடப்பட்டுள்ள தாவரப்பகுதிகளின் பெயர்களை எழுதுக. அவற்றின் பிரதான தொழிலையும் அருகே குறிப்பிடுக.**




| தாவரப்பகுதியின் பெயர் | தாவரப்பகுதியின் தொழில் |
|---|---|
| A17.............................. | 21.............................. |
| B18.............................. | 22.............................. |
| C19.............................. | 23.............................. |
| D20.............................. | 24.............................. |





*** எமது சுற்றாடலில் பல்வேறு தாவரங்களும் அவற்றின் பூக்களும் உண்டு. பூக்கள் தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க்கோடிடுக.**

25. வெள்ளைநிறமான இரவில் மலர்ந்து மணம் பரப்பும் பூ
1. செவ்வரத்தை 2. சூரியகாந்தி 3. றோசா 4. மல்லிகை
26. காலை முதல் மாலை வரை நேரம் காட்டும் பூ
1. செவ்வரத்தை 2. சூரியகாந்தி 3. நாலுமணி 4. முல்லை
27. புதுவருடத்தில் (சித்திரை மாதத்தில்) பூக்கும் பூ
1. முள்முருக்கு 2. பருத்தி 3. நந்தியாவட்டை 4. றோசா
28. வைகாசி மாதத்தில் பூக்கும் பூ
1. முள்முருக்கு 2. வெசாக் பூ 3. வாகைமரப்பூ 4. பிறைப்பூ
29. பூக்களை நாடிவரும் உயிரினம்
1. தேனி 2. வெளவால்
3. தேன்குழவி 4. மேற்சொன்ன மூன்றும்
30. பூக்களின் அழகான பாகம்
1. அல்லி 2. புல்லி 3. கேசரம் 4. பூக்காம்பு

*** கீழ்வரும் கூற்றுக்கள் சரியாயின் "A" எனவும் பிழையாயின் "B" எனவும் எதிரே உள்ள கூட்டினுள் எழுதுக.**

31. நாளாந்தம் எமது உணவில் கீரைவகை உணவு ஒன்று அமைந்திருத்தல் ( )
32. இலங்கையின் தேசிய விளையாட்டு கரப்பந்தாட்டம் ஆகும் ( )
33. மரம், செடி, கொடிகள் என்பன வைரமான தண்டுடையவை ( )
34. பொதுவாக இரவில் மலரும் பூக்கள் பல்வேறு நிறம் கொண்டவை யாகவும் வாசம் மிக்கவையாகவும் இருக்கும் ( )
35. வீதியில் விளையாடுதல் விபத்துக்களை ஏற்படுத்தலாம் ( )

*** தரப்படும் அறிவுறுத்தலுக்கு அமையச் செயற்பட்டு விடையை எழுதுக.**

36. 
இந்த இரு புள்ளிகளையும் இணைப்பதன் மூலம் நேர் கோடு வரைக. அவ்வாறான எத்தனை நேர்கோடுகள் வரையாலாம்?
....................................................................................
37. 
இந்த இரு புள்ளிகளையும் இணைப்பதன் மூலம் வளைகோடு வரைக. அவ்வாறான எத்தனை வளைகோடுகள் வரையலாம்?
....................................................................................
38. 
இப்புள்ளிகளை இணைப்பதன் மூலம் பெறத்தக்க உருவின் பெயர் யாது?
....................................................................................



39. இப்புள்ளிகளில் எவற்றை இணைப்பதன் மூலம் நிலைக் குத்துக் கோடு பெறப்படும்?
....................................................................................
40. இவற்றுள் எவற்றை இணைப்பதன் மூலம் கிடைக்கோடொன்றைப் பெறலாம்?
....................................................................................

*** கீழே நாம் அன்றாடம் பயன்படுத்தும் சில அளவீடுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் மிகப்பெரிய திட்டத்தையும் மிகச் சிறயதிட்டத்தையும் புள்ளிக்கோட்டில் எழுதுக.**


| | அளவீட்டுத்தொகுதி | பெரிய அளவீடு | சிறிய அளவீடு |
|---|---|---|---|
| 41. | கிலோகிராம், மில்லிக்கிராம், கிராம் | | |
| 42. | மில்லி லீற்றர், லீற்றர் | | |
| 43. | நாள், மணி, வாரம் | | |
| 44. | நிமிடம், செக்கன், நாள் | | |
| 45. | கிலோமீற்றர், சென்ரி மீற்றர், மீற்றர் | | |

*** கீழ்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.**

| | பொருள் | பெறுமதி | செலுத்திய பணம் | மீதிப் பணம் |
|---|---|---|---|---|
| 46. | பென்சில் | ரூபா 24.00 | ரூபா 30.00 | |
| 47. | சவர்க்காரம் | | ரூபா 20.00 | ரூபா 1.75 |
| 48. | அடிமட்டம் | ரூபா 9.00 | | ரூபா 6.00 |
| 49. | மைப்போத்தல் | ரூபா 25.00 | ரூபா 30.00 | |
| 50. | நிறக்கட்டி | | ரூபா 15.00 | ரூபா 8.00 |




இவ்வுரு காட்டுவது செவ்வக வடிவமான ஒரு காணி யாகும். அதன் நீளம் அகலத்தின் இருமடங்காகும். அதன் நீளம் 40 மீற்றராகும்.

51. AB பக்கத்தில் மதில் கட்டுவதற்கு 800 செங்கற்கள் தேவையாகும். முழுக்காணியைச் சுற்றிலும்மதில் கட்டுவதற்கு எத்தனை செங்கற்கள் தேவையாகும்?
....................................................................................
52. மதில் கட்டுவதற்கு, மேசன் ஒருவருக்கு நாளொன்றுக்கு ரூபா 200உம், கூலியாள் ஒருவருக்கு நாளொன்றுக்கு ரூபா 100 உம் செலுத்த வேண்டும். மேசன்மார் மூவரும் கூலியாட்கள் இருவரும் 10 நாட்கள் வேலை செய்தார்கள் எனின், அவர்களுக்குச் செலுத்த வேண்டிய மொத்தப் பணம் யாது?
....................................................................................
53. கட்டிடங்களுக்கு அத்திவாரம் போடுவதற்கு இலங்கையில் அதிகமாகப் பயன்படுத்தும் பாறை வகை எது?
....................................................................................
54. 
மதில் கட்டும் போது செங்கல் கட்டப்படவேண்டியது பின்வரும் இரு முறைகளுள் எந்த முறையிலாகும்? (சரியான உருவின் கீழ் கோடிடுக.)
55. மதிலுக்குப் பதிலாக தாவரத்தடிகளையும் தென்னோலை /பனை ஓலை என்பவற்றையும் கொண்டு அமைக்கப்படுவது எவ்வாறு அழைக்கப்படும்?
....................................................................................

*** சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**



56. .........(She,He,I) is a girl 57. This.............(is, are, an) a car.
58. (They, He, This) is a tree

*** பின்வரும் பந்தியிலுள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களை கூட்டுக்குள்ளிருந்து தெரிந்து வெற்றிடங்களில் எழுதுக.**

**நீரை, கரையவிடும், நிறம், தன்மையும், வெளியேறும், வடிவத்தை, அரைப்போத்தலுள**

நீருக்கு (59).................................. இல்லை, மணம் இல்லை, சுவையும் இல்லை. எந்தப் பாத்திரத்தில் நிற்கின்றதோ அந்தப் பாத்திரத்தின் (60.)........................ப் பெற்றுக்கொள்ளும் (61).................................. உண்டு. ஒரு போத்தலுள் நிற்கும் நீரை நன்றாக அமுக்கி (62).................... விடமுடியாது. நீர் நிலைகளில் அன்றி விலங்கு, தாவரம் போன்ற பல்வேறு பொருள்களிலும் (63).................... அடங்கியுள்ளது. இயற்கையாகவே நீர் ஆவியாக மாற்றப்பட்டு (64)...................... குறைந்தளவு நீரில் அம்மாற்றத்தை நன்கு காணக்கூடியதாய் இருக்கும்.

*** பின்வரும் சித்திரங்களை வரையும் போது, கூடுதலாகப் பயன்படுத்த வேண்டிய நிறம் எதுவென எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது ஆங்கிலத்தில் எழுதுக.**

65. பழுத்த வாழைப்பழச் சீப்பொன்றை வரையும் போது..............................
66. கடற் காட்சியொன்றை வரையும் போது..............................
67. மழை மேகங்கள் நிறைந்துள்ள இராக்காட்சியொன்றை வரையும்போது..........
68. காடு ஒன்றை வரையும் போது..............................

*** உங்கள் சூழலில் பல்வேறு வகைப்பட்ட உயிரிகள் காணப்படுகின்றன. அவற்றை நீங்கள் அவதானித்திருப்பீர்கள்.**

69. உமது சூழலில் உள்ள உயிரிகளுள் மிகவும் மெதுவாக நகரும். ஒரு உயிரியின் பெயரை எழுதுக. (...........)
70. உங்கள் சூழலில் உள்ள உயிரிகளில் அதிக கால்கள் உடையதுஎது? (...........)
71. கூட்டமாகவும் ஒழுங்காகவும் செல்லும் உயிரிகள் எவை? (...........)
72. மழை வருவதையும் இயற்கை மாற்றத்தையும் அறிவிக்கும் உயிரிகள் எவை? (..........)

*** கீழே நடைபெற்றுக் கொண்டிருக்கும் சில செயற்பாடுகள் தரப்படுகின்றன. அவற்றைக் குறிக்கும் தமிழ்ச் சொல்லை முதலிலும் ஆங்கிலச் சொல்லை அதனைத் தொடர்ந்தும் தருக.**



73) .................... 74)........................ 75)........................

*** "தாவரத்தினால் ஏற்படும் நன்மைகள்" என்னும் தலைப்பின் கிழ் சரியான எழுவாய் பயனிலையுடன் கூடிய 6 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது 4 சொற்களையாவது கொண்டிருக்க வேண்டும்.**

76. ....................................................................................
77. ....................................................................................
78. ....................................................................................
79. ....................................................................................
80 ....................................................................................
81. ....................................................................................

**5ம்தர புலமைப்பரீட்சை**
**வினாத்தாள் - 6**

மாணவர் முழுப்பெயர்..............................
பாடசாலையின் பெயர் :..............................
வீட்டின் முகவரி:..............................
மாணவர்களே உங்கள் விடைகளை 12.03.2003 க்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுடன் இக்கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

அனுப்பவேண்டிய முகவரி
வலம்புரி
கல்விப் பகுதி
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்

# நைஜீரியாவில் ஏற்பட்டுள்ள இனக்கலவரம்

# பழங்குடிகள் - விவசாயிகள் மோதல்

## பொலிஸ் – இராணுவம் உட்பட 64பேர் பலி

(லாகோஸ்)

நைஜீரியாவின் வடகிழக்குப் பகுதியில் இனக் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் காரணமாக 64பேர்வரை உயிரிழந்துள்ளனர்.

இரண்டு மாநிலங்களைச்சேர்ந்த பழங்குடியினருக்கும், விவசாயிகளுக்கும் இடையில் பலதடவைகள் ஏற்பட்டவன்முறையினால், படை வீரர் ஒருவர், பொலிஸ் உத்தியோ கத்தர் 7பேர் உட்பட 64பேர்வரை உயிரிழந்துள்ளனர்.

ஷாப் நாட்டைச் சேர்ந்த ஒரு குழுவினர், அயுததாரர்களாக வன்முறைகளைத் தொடங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வன்முறைச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 3ஆம் திகதிவரை தொடர்ராக ஜனாதிபதி தேர்தலையும் உள்ளூராட்சித் தேர்தலையும் நைஜீரியா நடத்தவுள்ள நிலையிலேயே இத்தகய வன்முறைகள் இடம்பெற்றுள்ளன. இதன் காரணமாக தேர்தலில் குழப்ப நிலைகள் தோன்றலாம் என அந்நாட்டு அரசியல் வட்டாரங்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (பி-2)

### வாக்கு எண்ணும் அறைக்கு தீவைப்பு

(புதுடில்லி)

நாகலாந்து தேர்தல் தொகுதியல் முறை கேடுகள் இடம் பெற்றதையடுத்து அப்பகுதிக்கான தேர்தல் முடிவுகள் வெளியிடுவதை தேர்தல் ஆணையம் நிறுத்திவைத்துள்ளது.


இதனையடுத்து வன்முறைக் கும்பல்கள் வாக்குகள் எண்ணும் அறையை தீவைத்துக் கொழுத்தியுள்ளனர்.

தேர்தல் ஆணையம் இந்த நிலைமையை கட்டுப்படுத்த உயர் மட்ட மத்திய பார்வையாளர்களை இத்தொதிக்கு நாளை அனுப்பி வைக்கவுள்ளது. (பி-2)

### பிடிபட்ட அல் கெய்டா தலைவரிடம்

# ஒஸமா பின்லேடன் மறைந்துள்ள இடம் பற்றியும் விசாரணை

(வாஷிங்டன்)




அமெரிக்க இலக்குகளைத் தாக்குவதற்கு திட்டம் வகுத்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள அல்கெய்டா செயற்பாட்டுத் தலைவர் காலித்ஷேக் முஹமது மீது அமெரிக்கப்புலன்விசாரணை அதிகாரிகள் தீவிரமாக விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். அமெரிக்கா மீது தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டிருந்ததா என்பது குறித்தும் அல்கெய்டா அமைப்பின் தலைவர் ஒஸமா பின்லேடன் எங்கு இருக்கின்றார் என்பது குறித்தும் அறிந்தும் கெகாள்வதே இந்த விசாரணையின் முக்கிய நோக்கமாக அமைந்துள்ளது.

இதேவேளை, ஆப்கானிஸ் தானுக்கும் பாகிஸ்தானுக்கும் இடைப்பட்ட வட பிராந்திய எல்லைப் பகுதியில ஒஸமாபில்லேடன் ஒளிந்திருக்கலாம் என்று அமெரிக்க அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

கடந்த முதலாம் திகதி பாகிஸ்தானில் வைத்துக் கைது செய்யப்பட முகமது 2002மும் ஆண்டு செப்ரெம்பர் 11இல் 3 ஆயிரம் பேரின் உயிரைக் குடித்த தாக்குதலை திட்டமிடடவர்களில் ஒருவர் எனவும் இவர் மேலும் பல தாக்குதல்களை நடத்த திட்டமிட்டிருந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்ற போதிலும் அவை குறித்த போதிய ஆதாரங்கள் எவையும் இதுவரை இடைக்கவில்லையென அமெரிக்க அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (பி-2)




நான்கு வடகொரிய ஜெட்விமானங்களால் வழிமறிக்கப்பட்ட நான்கு எஞசின்களைக்கொண்ட அமெரிக்க விமானப்படை வேவுவிமானம் இப்படத்தில் காணப்படுவது போன்ற ஒன்றுதான்.

## யு.எஸ்.வேவு விமானத்தை வ.கொ.வழி மறித்து ஆத்திரமூட்டல்

(வாஷிங்டன்)

அமெரிக்க உளவு விமானமொன்றை வட கொரிய யுத்த ஜெட் விமானங்கள் வழி மறித்து ஆத்திரமூட்டியிருப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை ஜப்பானியக கடலுக்கு மேலாக இந்த வழி மறிப்பு நடந்ததாகவும் அணு ஆயுதயுத்தமொன்றுக்கு இந்த சம்பவம் இடமளிக்கக்கூடியதாக மாறியிருக்குமென்று தெரிவிக்கப்பட்டது.

நான்கு வடகொரிய ஜெட் சண்டை விமானங்கள் அமெரிக்கா விமானப்படையைச்சேர்ந்த ஆர்.சி-135வேவுவிமானத்தை சர்வதேச வனப்பிராந்தியத்தில்வழிமறித்து சுமார் 50அடிவரை அருகில் வந்து சென்றதாகக் குற்றஞ்சாட்டப் பட்டது. (பி)

## விமான விபத்தில் அதிஷ்டவசமாக உயிர் தப்பிய 3சிறுவர்கள்

(போஸ்டன்)

அமெரிக்க மாஸச்சு செட்ஸ் பகுதியிலுள்ள காடொன்றில் ஏற்பட்ட விமான விபத்தில் மூன்று சிறுபையன்கள் அதிஷ்டவசமாக உயிர் தப்பியிருக்கிறார்கள்.

கடந்த திங்கட்கிழமை இரவு ஏற்பட்ட இந்த விமான விபத்தில் இந்தச் சிறுவர்களின் தாயும் இரு சகோதரர்களும் கொல்லப்பட்டுவிட்டனர். உயிர் தப்பிய சிறுவர்கள் அன்றிரவு முழுவதும் கடுங்குளிரில் தவித்துக் கொண்டிருந்த நிலையில் காலை விடிந்தபொழுது மீட்புப் படையினர் சென்று காப்பாற்றினார்கள். இவர்களுடன் காப்பாற்றப்பட்ட தகப்பனார் பின்னர் கால மானார்.

கற்பாறைகள் அடர்ந்த காட்டுப் பகுதியில் காப்பாற்றப்பெற்ற 2,5,10 வயதான இச் சிறுவர்கள் ஹெலிக் கொப்டர் மூலம் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். (பி)

# இந்தியாவில் ஏழைகளுக்கு அரிசி வழங்க ஏற்பாடு

## பாராளுமன்றில் பிரதமர் அறிவிப்பு

(புதுடெல்லி)

அந்தியோதயா திட்டத்தின் கீழ் வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள ஏழைகளுக்கு மானிய விலையில வழங்கப்பட்டு வரும் அரிசி, மற்றும் கோதுமை அடுத்த மாதத்தில் இருந்து 25 கிலோவில் இருந்து 35 கிலோவாக அதிகரிக்கப்படும் என்று பிரதமர் வாஸ்பாய் நேற்று லோக்சபையில் அறிவித்தார்.

பாராளுமன்ற கூட்டுக்கூட்டத்தில் ஜனாதிபதி அப்துல்கலாம் உரையாற்றினார். அவர் உரைக்கு நன்றி தெரிவிக் கும் தீர்மானம் மீது விவாதம் நடைபெற்றது. விவாதத்திற்கு பிரதமர்வாஜ்பாய்கடந்த பல தினங்களுக்கு முன்பே பதில் அளிக்க இருந்தார். ஆனால்திடீரென்று அவருக்கு கண்வலி ஏற்பட்டதால் பதில் அளிப்பது தள்ளி வைக்கப்பட்டது. நேற்று முன்தினம் பிரதமர் வாஜ்பாய் பதிலளித்து பேசிதா வதது.

**மத்திய கிழக்கு இந்தியர்க்கு**

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தால் மத்திய கிழக்காசியா வில் உள்ள 40 லட்சம் இந்தியர்களை பத்திரமாக இந்தியாவுக்கு கொண்டு வருவது உள்பட அனைத்து வகையான நெருக்கடியையும் சமாளிக்க அவசர கால திட்டம் வகுக் கப்பட்டுள்ளது.

வளைகுடா நாடுகளில் 40 லசட்சத்திறகும் மேற்பட்ட இந்தியர்கள் இருப்பதால் அந்த நாடுகளுடன் இந்தியாவுக்கு நெருக்கமான உறவு உள்ளது. ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்கலாம் என்ற தகவல் எனக்கு கிடைத்துள்ளது. இந்தியா வின் தூதரக ரீதியான உறவுக்கு ஒரு பெரும் சோதனை ஏற்பட்டுள்ளது. இருந்தபோதிலும் எந்தப் பிரச்சினையையும் இந்தியா சமாளிக்கும்.

இவ் வாறு பிரதமர் வாஜ்பாய் கூறினார். பிரதமர் வாஜ்பாய் பதில் அளித்துக் கொண்டிருந்த போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குறுக்கிட்டு ஈராக் விஷயத்தில் மத்திய அரசின் கொள்கை என்ன வென்று கேட்டனர். அதற்கு பதில் அளித்த பிரதமர் வாஜ்பாய், ஈராக் விஷயத்தில் மத்திய அரசின் கொள்கை தெளிவாக இருக் கிறது. ஏற் கனவே தெரிவிக்கப்பட்டு விட்டது. ஈராக் விஷயத்தில் தேவைப் பட்டால் அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டி விவாதிக்கப் படும் என்றார்.

மலேசியா தலைநகர் கோலாம் பூரில் நடைபெற்ற நடுநிலை நாடுகள் மாநாட்டில் ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்கக்கூடாது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதிலிருந்து இந்தியாவின் நிலை மாறாது என்றும் வாஜ்பாய் கூறினார்.

**அமெரிக்காவின் பலவீனம்**

நம்மிடம் அணு ஆயுதங்கள் உள்ளன. ஆனால் நாம் ஒரு பொறுப்புள்ள நாட்டைச் சேர்ந்தவர்கள். இந்தியாவுக்கு எதிராக யாரும் கேள்வி எழுப்பவில்லை. ஆனால் பாகிஸ்தான் மீது சர்வதேச நாடுகளுக்கு சந்தேகம் உள்ளது. அந்த நாட்டைத் தான் பிறநாட்டினர் கேள்வி மேல் கேள்வி கேட்டு வருகின்றனர். நாம எந்தவித பதட்டத்தையும் உருவாக் கவில்லை. எல்லை கடந்த பயங்கர வாதத்தை நிறுத்த வேண்டும் என்று பாகிஸ்தானை அமெரிக்க வலியுறுத்த முடியாத அளவுக்கு அமெரிக்கா பலவீனமாக உள்ளது என்று வாஜ்பாய் கூறினார்.

பாகிஸ்தானுடன் போர் ஏற்பட்டால் அது இறுதிப் போராக இருக்கும் என்று நான் கூறியது உண்மை தான். அதை ஒப்புக்கொள்கிறேன். இதனால் ஆக்கபூர்வமான சமிஞ்கை தோன்றி உள்ளது. எதிர்காலத்தில் பாகிஸ்தானின் போக்கில் மாற்றம் ஏற்படுமேயானால் அதற்கு தகுந்த வாறு இந்தியாவும் நடந்து கொள்ளும என்றும் வாஜ்பாய் கூறினார். (பி).

## விமானதாக்குதலில் 6 சிவிலியன்கள் பலி

(பக்தாத்)

ஈராக்கில் அமெரிக்க பிரிட்டிஷ் படை விமானங்கள் தாக்குதல் நடத்தியதில் 6 சிவிலியன்கள் கொல்லப்பட்டதுடன் 15இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

ஈராக்கின் பாஸ்ரா நகரத்தின் எல்லைப்பகுதிக்குள் அத்து மீறி நுழைந்த அமெரிக்க பிரிட்டிஷ் விமானங்களே இத் தாக்குதலை மேற்கொண்டுள்ளன என்று ஈராக்கின் செய்திக் தொடபாளர் தெரிவித்துள்ளார்.

## ஹெலி விபத்து 3பேர் பலி

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் நேற்று இடம் பெற்ற ஹெலி கொப்ரர் விபத்தில் அதில் பயணம் செய்த 3பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தோனேஷியாவிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலிலுள்ள நீச்சல் தடாகத்திலேயே இந்த ஹெலி கொப்ரர் வீழ்ந்துள்ளது என்றும், நீச்சல் தடாகத்தில் இருந்து 3 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது..

இதேவேளை, விபத்து நிகழ்ந்தற்கான காரணம் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை எனவும் விபத்துக்கான காரணத்தை கண்டறியும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாகவும் இந்தோனேஷியத் தகவல்கள் கூறுகின்றன. (பி-2)

## அயோத்தி வழக்கு விசாரணை நாளை உச்ச நீதிமன்றில்

(புதுடில்லி)

அயோத்தி பிரச்சினை தொடர்பாக மத்திய அரசு தாக்கல் செய்துள்ள மனு மீதான விசாரணை இம்மாதம் 6ஆம் திகதி டெல்லிஉச்ச நீதிமன்றில் துவங்குகிறது.

உத்தரபிரதேச மாநிலம் அயோத்தியில் கடந்த 2002ம் ஆண்டு மார்ச் மாதம் ராமர் ஜென்மபூமி அறக்கட்டளை சார்பில் ராமர் கோவில் கட்டுவதற்காக சிலை தான பூஜை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இதனால் அயோத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இதனை தொடந்து அயோத்தியில் அரசால் கையகப்படுத்தப்பட்டுள்ள 67 ஏக்கர் நிலத்தில் எந்த மத வழிபாட்டு நிகழ்ச்சிகளையும் நடத்தக் கூடாது என்று அதே வருடம் மார்ச் மாதம் உச்ச நீதி மன்றம் இடைக்கால தடை விதித்தது.

இந்த நிலையில் அயோத்தியில் ராமர் கோவில் கட்டியே தீருவோம் என்ற கொள்கையில் உள்ள விஸ்வ ஹிந்துபரிஷத் போன்ற சங்பரிவார் அமைப்புகள் அயோத்தியில் உள்ள 67ஏக்கர் நிலத்தை ராமர் ஜென்மபூமி அறக்கட்டளை வசம் ஒப்படைக்க வேண்டும் என்று மத்திய அரசை வலுயுறுத்தி வருகின்றன.

சங்பரிவார் அமைப்புக்களின் கோரிக் கைப்படி அந்த 67ஏக்கர் நிலத்தை ராமர் ஜென்ம பூயிடம் ஒப்படைக்க வேண்டும் என்றால் சுப்ரீம் கோர்ட்டு பிறப்பித்துள்ள இடைக்கால தடை உத்தரவை முதலில் ரத்து செய்ய வேண்டும். சட்டபூர்வமான இந்த நடவடிக்கைக்கு பிறகு தான் நிலத்தை ஒப்படைக் ஏற்பாடு செய்யப்படும் எனவே இந்த இடைக்காலத் தடையைத் ரத்து செய்ய வேண்டும் என்று கோரி டெல்லி உச்ச நீதி மன்றில் மத்திய அரசு மனுத்தாக்கல் செய்திருந்தது (பி)



அமெரிக்க பேர்ஸ்ஹாபர் துறைமுகததில் யு.எஸ்.எஸ் மிஸ் ஸவுரி யுத்தக்கப்பல் தனது புதிய தரிப்பிடம்சென்றடைகின்றது. அல்கெய்டா தீவிரவாதிகள் ஹவாயிலுள்ள பேர்ஸ் ஹாபரை விமானங்களைக் கடத்தித்தாக்கி அழிப்பதற்குத் திட்டமிட்டிருப்பதாக உளவுத்துறைத் தகவல் கிடைத்ததால் அமெரிக்க அதிகாரிகள் விழிப்படைந்துள்ளனர்.

# யுத்தம் ஓய்ந்தாலும் குடாநாட்டில் மரண பயம் இன்னமும் நீங்கவில்லை

## நோர்வேயிலிருந்து வந்த குழுவிடம் மக்கள் பிரதிநிதிகள் ஏகோபித்துக் குரல்

(தென்மராட்சி)

**அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட போதிலும் கூட குடாநாட்டில் வாழ்கின்ற மக்கள் நாளாந்தம் மரண பயத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர். இங்கிருக்கும் பாதுகாப்புப் படையினர் முற்று முழுதாக வெளியேறாத வரை தமிழ் மக்கள் நிம்மதியுணர்வுடன் வாழ முடியாது.**

என யாழ்ப்பாணத்திலுள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைவர் எஸ்.கஜேந்திரன் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த நோர்வே குழுவினரிடம் தெரிவித்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்னர் குடாநாட்டின் நிலைமைகள் பற்றிய தள நிலைமைகளை ஆராயும் பொருட்டு ஒஸ்லோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் திருமதி அஸ்ரிட் என் ஹெய்பேர்க் தலைமையில் வந்த குழுவினர் மாவட்டத்தில் இயங்கி வருகின்ற பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும், உயர்கல்வி நிறுவனங்களின் புத்திஜீவிகளையும் சந்தித்துள்ளனர்.

மாணவர் பேரவைத் தலைவர் எஸ்.கஜேந்திரன் இக்குழு விடம் தொடர்ந்து கூறுகையில்,

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்னமும் நிலை கொண்டிருக்கும் பாதுகாப்புப் படையினரால் பொது மக்கள், விசேடமாகப் பெண்கள் எப்போதும் அச்ச நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். யுத்தம் நடைபெறவில்லை. துப்பாக்கிகள் மௌனித்துள்ளன. ஆயினும் யுத்த பீதி ஓயவில்லை. உயர் பாதுகாப்பு வலயத்தில் வாழ்ந்த 33 ஆயிரம் குடும்பங்கள் வாழ வழியின்றி இருக்கின்றன.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, தமிழ் தேசியம், மரபு வழித்தாயகம் என்ற கோட்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டால் தமிழ் மக்கள் ஐக்கிய இலங்கைக்குள் வாழ முடியுமா என்பது பற்றிச் சிந்திக்க முடியும். தவிரவும் தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்பட்டாலும் கூட, விடுதலைப்புலிகளிடம் இருந்து ஆயுதங்கள் களையப்படக் கூடாது. அப்படிக் களையப்பட தமிழ் மக்கள் எப்போதும் அனுமதிக்க மாட்டார்கள்.

தமிழ் மக்களின் காவலர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் மட்டும் தான். ரணில் விக்கிரமசிங்கவின் அரசு தமிழ் மக்களின் பிரச்சினைகளை முற்று முழுதாக தீர்த்துக் கொள்ளும் என்ற நம்பிக்கை எமக்கு இப்போது இல்லாமல் போகின்றது.

தற்போது திருகோணமலையில் கட்ப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தில் 80 சதவீதமான சிங்கள மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 20 சதவீதமான தமிழ் மாணவர்களே அங்கு அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இந்த நிலை எமக்குப் பல ஐயுறவுகளை ஏற்படுத்துகின்றன எனக் குறிப்பிட்டார்.

மகளிர் அபிவிருத்தி நிலையத்திற்கு விஜயம் செய்திருந்த நோர்வேக் குழுவினரிடம் நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கும் போது,

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழ்கின்ற மக்கள் சுதந்திரம் எங்கே எனத் தேடிக்கொண்டிருக்கின்றனர். புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்னர் குடாநாட்டில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவு எவ்விதமான மாற்றமும் ஏற்படவில்லை.

பெண்கள், குறிப்பாக கணவனை இழந்தவர்கள் வாழ்வியல் பிரச்சினைகளால் அன்றாடம் கஷ்டப்பட்டு வருகின்றனர். பெண்கள் தமது வாழ்வுக்கான ஆதாரமின்றி இருக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இங்கு தொழில் வாய்ப்புகள் இல்லாத நிலை இருப்பதால் ஆயிரக் கணக்கான பெண்கள் வெளிநாடுகளுக்கும் தென்பகுதிக்கும் சென்று கொண்டிருக்கின்றார்கள் குடாநாட்டில் தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும். அத்துடன் சமாதான அர்த்தபுஷ்டியுள்ளதாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்துக்கு விஜயம் செய்திருந்த இக்குழுவினரிடம் இணையப் பிரதிநிதிகள் கருத்துக் கூறும் போது,

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின் குடாநாட்டில் வாழ்வியல் நிலைகளில் எத்தகைய உருப்படியான மாற்றங்களும் ஏற்படவில்லை. மக்கள் இன்னமும் அச்ச உணர்வுடன் தான் வாழ்ந்து வருகின்றனர்.

இயல்பு வாழ்க்கை இன்னமும் மேம்பாடடையவில்லை. இடம்பெயர்ந்த குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்கு இன்னமும் மீளக் குடியேறக் கூடிய ஏது நிலைகள் உருவாகவில்லை.

குடாநாட்டில் வேலையின்மை பிரச்சினையும் போதிய தொழில் இன்மையும் இப்போதும் நிலவி வருகின்றது. இந்த நிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் எத்தகைய குறிப்பிடும் படியான மாற்றத்தினையும் கொண்டு வரவில்லை எனக் குறிப்பிட்டனர்.

இக்குழுவினர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்து துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையையும், யாழ். அரச செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதனையும் சந்தித்துக் குடாநாட்டு நிலைமைகள் பற்றிக் கேட்டறிந்து கொண்டனர்.

தவிரவும் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம், கண்காணிப்புக் குழு அலுவலகம் என்பவற்றுக்கும் விஜயம் செய்து தற்போதைய நிலைமைகள் தொடர்பில் இக்குழு கேட்டறிந்தது. (உ-77,4)

## முகாம் வாழ்க்கைக்கு முடிவேதும் இல்லையா?

## 72 இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் 8073 பேர் அடிப்படை வசதிகளின்றி அல்லல்

(தென்மராட்சி)

யாழ். மாவட்டத்தில் வலிகாமம், வடமராட்சி பிரதேசங்களில் இயங்கி வரும் 72 இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்ற ஆயிரத்து 977 குடும்பங்களை சேர்ந்த 8 ஆயிரத்து 73 பேர் இருப்பிட, மலசல கூட, குடிநீர் மற்றும் தொழிலின்மை போன்ற பிரச்சினைகளுக்கு மத்தியில் இருந்து வருவது தெரியவந்துள்ளது.

இவற்றில் 49 நிலையங்கள் 1990 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டவை. மீதியான 23 நிலையங்களும் 2000 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டவை.

1990 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட 49 நிலையங்களில் தங்கியிருப்போர் வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள். 2000 ஆம் ஆண்டில் அமைகக்கப்பட்ட 23 நிலையங்களில் தங்கியிருப்போர் தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு போன்ற பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் எனவும் அறியப்படுகின்றது.

இத்தகைய நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக குடியிருப்புகளின் நிலைமைகள் மிகவும் மோசமான நிலையில் இருப்பது பற்றி இந்நிலையங்களின் சுகாதார நிலைமைகளை அவதானித்து வரும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் முக்கிய பிரதிநிதி ஒருவர் அரச செயலக உயர் மட்ட அதிகாரியிடம் சுட்டிக்காட்டியிருப்பதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, இம்முகாம்களில் அவசியம் செய்யப்படவேண்டிய திருத்த வேலைகள் பற்றிய முழு விபரங்களையும் உடனடியாக வழங்கும்படி யாழ். அரச செயலகம் பிரதேச செயலர்களிடம் கோரியுள்ளதாகவும், ஆயினும் இது தொடர்பாக எந்த ஒரு பிரதேச செயலரும் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவில்லை ஆதலால், குறிப்பிட்ட நிலையங்களில் எவ்விதமான திருத்தவேலைகளோ அல்லது பிரச்சினைகளோ இருப்பது பற்றித் தெரிய வரவில்லை எனவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்விதமிருக்க, இந்நிலையங்களில் தங்கியிருக்கும் பெரும்பாலான குடும்பங்களுக்கு போதிய குடிநீர் வசதிகள் இல்லை. இதனால் தமக்குத் தேவையான குடிநீருக்கு பல மைல் தூரம்நடந்து சென்றே எடுத்து வருகின்றனர்.

அத்துடன் இந்நிலையங்களில் இருந்து கணவன்மார்களை இழந்துள்ள பெண்கள், கணவன்மார்களால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் முதியவர்கள் போதிய வருமானமற்ற நிலையில் பாரிய வாழ்க்கைப் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

அரசினால் மாதாந்தம் வழங்கப்படும் நிவாரணப் பொருட்களை மட்டுமே இந்நிலையங்களில் இருப்போர் நம்பி வாழ்ந்து வருகின்றனர். முன்னைய காலங்களில் இந்நிலையங்களுக்கு விஜயம் செய்து பல்வேறுபட்ட உதவிகளை வழங்கிய பொதுமக்கள் மற்றும் பொது நிறுவனங்கள் தற்போது எவ்வகையான உதவிகளும் வழங்குவதில்லை எனவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்நிலையங்களில் தங்கியுள்ள பாடசாலை செல்லும் பருவத்தினரின் கல்விச் செயற்பாடுகளும் கேள்விக்குறியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குடாநாட்டின் அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வுகள் காணப்படும் வரை எமக்கு விமோசனம் கிடைக்கப்போவதில்லை என முகாமில்தங்கியுள்ள முதியவர் ஒருவர் இது குறித்து ஆதங்கம் வெளியிட்டுள்ளார். (உ-77)

## தரம் 08 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டி

பரிசில்கள்

1ஆம் பரிசு ரூபா 500
2ஆம் பரிசு ரூபா 250
3ஆம் பரிசு ரூபா 150

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

*நாயன்மார்கட்டு **அமரர் இராமலிங்கம் இராசையா** அவர்கள் ஞாபகார்த்தமாகப் பரிசில்கள் வழங்கப்படும்.

### போட்டியின் விதிகள்

**தரம் எட்டில** இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

* **கட்டுரையின் தலைப்பு :** ''எனக்குச் சிறகு முளைத்தால்''
* கட்டுரை 150 தொடக்கம் 175 சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.
* புஸ்காப் தாளில் ஒவ்வொரு தனிப் பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.
* கட்டுரைகள் 25.03.2003 ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

### இணைக்கும் பத்திரம்

### கட்டுரைப் போட்டி இல-3

மாணவர் முழுப் பெயர் :------------------------------------------
பாடசாலை :------------------------------------------
கற்கும் தரம் :------------------------------------------

**உறுதிப்படுத்துகிறேன்**

------------------------
ஆசிரியர்

## பாண்ட்வாத்தியக் கருவிகள்

(கோப்பாய்)

அச்சுவேலி மத்திய கல்லூரிக்கு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனால் பாண்ட் வாத்திய இசைக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. அண்மையில் பாடசாலையில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்த அமைச்சர் இதனை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (உ-77)



சமகால நிலை குறித்து ஆராய்வதற்காக நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த நோர்வே குழுவினரை படத்தில் காணலாம்.
படம்:க.பவன்

# தரம்-5 புலமைப்பரிசில்
## பயிற்சி வினாத்தாள்
### வினா இல : 04

**அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம்**

1. த. ருசிகா - இணுவில் மத்திய கல்லூரி
2. ந. யூட்ரெறோன் - புனித பத்திரிசியார் கல்லூரி
3. வ. ஹேசிகா - யா/புனித ஜோன் பொஸ்கோ
4. சி. விஷ்ணுகரன் - இராமநாதன் கல்லூரி
5. பு. வதுஷா - இந்து ஆரம்ப பாடசாலை
6. இ. சகானா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
7. சா. மதுறமி - சுண்டுக்குளி மகளிர்கல்லூரி
8. த. பிரியந்தி - மாணிக்கவாசகர் வித்தியாலயம்
9. சி. தேவகி - துன்னாலை மே. மெ. வித்தியாலயம்
10. எஸ். சந்திரதாஸ் - வல்வை ம. மகாவித்தியாலயம்
11. த. சத்தியா - சென்ஆன்ஸ் றோ.க.த.க.பாடசாலை
12. வி. பிரியா - பொலிகண்டி இ.த.க.பாடசாலை
13. சி. சுகந்தன் - மயிலிட்டி றோ.க. பாடசாலை
14. லோ. தேனுஷா - மாணிக்கவாசகர் வித்தியாலயம்
15. பு. வினஜா - வல்வை விநாயகர் வித்தியாலயம்
16. ரா. திவாகர் - வல்வை விநாயகர் வித்தியாலயம்
17. பி. நந்தினி - வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
18. பி. யோபிதா - வல்வை சிவகுரு வித்தியாலயம்
19. சி. டினோஜன் - ஆ. நட. இரா. வித்தியாலயம்
20. ஜெகரூபன் - தாவடி இ.த.க. பாடசாலை
21. க. சிந்துஜா - பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்
22. ப. ஸ்ரீமுருகன் - றோ.க.த.க பாடசாலை
23. சு. ஜோதிகா - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
24. து. வைஷ்ணவி - ஆனைக்கோட்டை அ.மி.த.பாடசாலை
25. இ. மதனிகா - வல்வை விநாயகர் வித்தியாலயம்
26. வி. துஷ்யந்தன் - நாகபூஷணி வித்தியாலயம்
27. கோ. ஸ்ரீநாத் - இந்து ஆரம்ப பாடசாலை
28. தி. சயேந்தி - ஆ. ந. இ. வித்தியாலயம்
29. பொ. கோகிலன் - மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்
30. சி. தயனி - ஆ. ந. இ. வித்தியாலயம்
31. சு. கிதுஷாந் - மாணிக்கவாசகர் வித்தியாலயம்
32. த. அகர்சனன் - இந்து ஆரம்ப பாடசாலை
33. ஜெ. கீர்த்திகா - இ.ம. ஆ. பாடசாலை
34. கீ. அச்சுதன் - றிபேக் கல்லூரி
35. கி. பவித்திரா - திருக்குடும்ப கன்னியர் மடம்
36. ர. யதுர்சன் . இ. ஆரம்ப பாடசாலை
37. கு. கௌதமன் - இ. ஆரம்ப பாடசாலை
38. ம. நிருபன் - சிவகுரு வித்தியசாலை
39. ஸ்ரீ.நீரஜா - வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
40. இ. கிரிஷாந் - மத்திய கல்லூரி
41. ச. மேனுஷா - ஆவரங்கால் நட. இரா. வித்தியாலம்
42. ப. சுகீர்த்தனா - தேவரையாளி இந்து கல்லூரி
43. வை. சிந்துஜா - நட. இரா. வித்தியாலயம்
44. ந. பரந்தாமன் - வல்வை சிவகுரு வித்தியாலயம்
45. ச. ஜெயபாரதி - வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
46. வி. சாருஜா - புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
47. பா. கஜந்தரூபி - கோண்டாவில் இ. மகா வித்தியாலயம்
48. ப. சிவருக்ஷி - இ. ஆ. பாடசாலை
49. த. விஜிதன் - கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
50. இ. திபிகா - ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாலயம்
51. இ. சிந்துஜன் - தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை
52. யோ. லவிஜெனா - அச்சுவேலி மத்திய கல்லூரி
53. தி. கோபிராஜ். உடுப்பிட்டி அ.மெ.கல்லூரி
54. பா. சந்திரா - வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
55. சி. துளசிகா - சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்
56. யோ.சுபாஜினி - இந்து ஆரம்ப பாடசாலை
57. சி. மனோஜிதன் - கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
58. ச. சோபிகா - கந்தரோடைதமிழ் கந்தையா வித்தியாலயம்
59. சி. கானமிர்தா - சாவகச்சேரி மகளிர் கல்லூரி
60. வி. ஐஸ்வரியா - ஆனைப்பந்தி மெ. மி. வித்தியாலயம்
61. ச. அபிநயா - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
62. சீ. சுஜீபனா - அச்சுவேலி மகளிர் கல்லூரி
63. த. கபிலன் - பரியோவான் கல்லூரி
64. க. லம்போதரன் - இந்து ஆரம்ப பாடசாலை
65. ச. தனேஷன் - திருநெல்வேலி இ.த. க. பாடசாலை
66. க. கர்சினி - நா. இரா. வித்தியாலயம்
67. லோ. கஜனா - பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை
68. சி. சிவசாந்தி - தம்பசிட்டி மெ.மி.த. பாடசாலை
69. த. தனுசியா - வல்வை விநாயகர் வித்தியாலயம்
70. ஆ. சேந்தன் - உடுப்பிட்டி அ.மி. கல்லூரி
71. சி. சரணிகா - ந.இ. வித்தியாலயம்
72. கா. கயனி - மகாஜனாக் கல்லூரி
73. பா. சோபிகா - சுழிபுரம் ஐக்கியசங்க வித்தியாலயம்
74. ஜெ. காயத்திரி - அளவெட்டி அருனோதயாக்கல்லூரி
75. ரா. துர்க்கா - கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
76. செ. சர்வகா - கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்
77. க. கணபாலன் - இந்து ஆரம்ப பாடசாலை
78. செ. கஜேந்திரன் புனித பத்திரிசியார் கல்லூரி
79. தி. கஜீவன் - தியாகராஜா ம. மகா. வித்தியாலயம்
80. ஆ. நிரோஜினி - சென்பீற்றர் றோ. க. த.க. பாடசாலை
81. சி. சிந்துஜா - மாணிக்கவாசகர் வித்தியாலயம்
82. செ. கலிஸ்ரா - சென்பீற்றஸ் வித்தியாலயம்
83. சி. சிவகரன் - டிறிபேக் கல்லூரி
84. கோ. டேவிற் - டிறிபேக் கல்லூரி
85. அ. றெஜிஷேன் - மத்திய கல்லூரி
86. சி. சஞ்சிகா - பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்

# மகளிர் தினத்தை ஒட்டி 2500 பெண்களுக்கு பாராட்டு

(கொழும்பு)

சர்வதேச மகளிர் தினத்தை ...ன்னிட்டு சமூக, பொருளாதார ...மம்பாட்டுத் துறைகளில் ஆற்றிய ...ங்களிப்புக்காக 2 ஆயிரத்து 500 ...ண்கள் பாராட்டப்படவுள்ளனர். ...மனிதவள அபிவிருத்தி, கல்வி, ...லாசார அமைச்சு இதற்கான ...பாடுகளைச் செய்துள்ளது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் இக் கௌரவிப்பு விழா இடம்பெறவுள்ளது.

"சகல துறைகளிலும், சகல மட்டங்களிலுமான தொழில்களிலும மகளிருக்கு சம வாய்ப்புக்கள் கிடைப்பதை உறுதி செய்வோம்" என்பது இவ்வாண்டு மகளிர் தின கருப்பொருளாகும்.

(உ)

## "பத்திரிகையாளன்" வெளியீடு

(தென்மராட்சி)

வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் "பத்திரிகையாளன்" எனும் பெயரில் மாதாந்த செய்திக்கடிதம ஒன்றினை இம்மாதம் முதல் வெளியிடவுள்ளது.

இதன் ஆசிரியராக தாயகம் சஞ்சிகையின் ஆசிரியரான க.தணிகாசலம் பணியாற்றிவருகின்றார். இச்செய்திக்கடிதம் இம்மாதம 18ஆம் திகதியன்று யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ள வைபவத்தில் வெளியிடப்படவுள்ளது.

(உ-77)

## நிரந்தர வைத்தியர் இல்லை

(வேலணை)

வேலணை கிராமிய வைத்தியாசலையில் இதுவரை நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்படாமையினால் அங்குசெல்லும் நோயாளர்கள் பல அசௌகரியங்களுக குள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏ-9 வீதி திறக்கபபட்ட பின்னர் இப்பகுதியில் பெருமளவு மக்கள் மீளக் குடியேறி வருகின்றபோதும் இவர்கள் வைத்திய சேவையினை பெறுவதில் மிகவும் சிரமம் அடைகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-47)

## விளம்பரப் பலகை சேதம்

(கொய்யாத்தோட்டம்)

பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தின் விளம்பரப் பலகை விஷமிகளால் அடித்து நொருக்கப்பட்டு எறியப்பட்டுள்ளது.

(உ-53)

## ஆத்திசூடி முற்றோதல் விழா

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சர்வோதய அமைப்பாளரும் முன்னாள் அறங்காவலருமான தொண்டர் க. திருநாவுக்கரசின் 65 ஆவது ஜயந்தி தினத்தையொட்டி எதிர்வரும் 7ஆம் திகதி முதல் 9ஆம் திகதிவரை ஔவைபிராட்டியின் "ஆத்திசூடி முற்றோதல் விழா" புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம் பதியில் இடம்பெறவுள்ளது.

இதன் பிரகாரம் 1ஆம் நாள் நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை மு.ப 9மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை தலைவர் கா. குகபாலன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்டசிரான் இணைப்பாளர் செ. இரத்தினம், தீவகவலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் வி. இராதாகிருஸ்ணன், தீவகக் கோட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் அருந்தவம், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வை. தியாகராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-10)

## ஜனனதின விழா

(பருத்தித்துறை)

விவேகானந்தர் ஜனனதின விழா இன்று புதன் கிழமை சுவாமி சித்துரூபானந்தா தலைமையில் பருத்தித்துறை இராம கிருஸ்ணமிஷனில் இடம்பெறவுள்ளது.

(உ-52)

## படித்தவர்களுக்கு பயிற்சிகள்

(வேலணை)

வேலணைப்பகுதி படித்த இளைஞர், யுவதிகள் மத்தியில் போருட் நிறுவன மகளிர் அமைப்பு, முன்பள்ளி ஆசிரியைகளிற்கான பயிற்சி மற்றும் சுகாதாரத் தொண்டர் பயிற்சி, வங்கியாளர் பயிற்சி என்பவற்றை நடாத்த முன்வந்துள்ளது.

இப்பயிற்சிகள் யாவும் வேலணை கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.

(உ-47)

## ஆலய ஓடுகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் ஆலயத்து முன்மண்டபக் கூரை ஓடுகள் களவாடப்பட்டுள்ளன.

மிகவும் பழமைவாய்ந்த இவ்ஆலயம் தற்போது புனருத்தாரணம் செய்யப்படாமல் இருந்து வருகின்றது.

இவ்வாலயத்தில் கடந்த சிவராத்திரியன்றே ஓடுகள்களவாடப்பட்டுள்ளன. (உ-4)

# போதைப்பொருள் வர்த்தகரை தராதரம் பாராது கைது செய்க!
## பொலிஸ்மா அதிபர் உத்தரவு

(கொழும்பு)

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளர்களை தராதரம் எதுவும் பார்க்காது கைது செய்யுமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு பொலிஸ்மா அதிபர் ரி.ஈ. ஆனந்தராஜா உத்தவிட்டுள்ளார்.

நாட்டில் குற்றச்செயல்களைத் தடுக்கும் நோக்குடன் இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

போதைப் பொருள் வியாபாரம் நடைபெறும் இடங்களை அப்பகுதிப் பொலிஸார் சுற்றிவளைத்து நடவடிக்கை எடுக்கத்தவறும் பட்சத்தில், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் உருவாக்கப்பட்டுள்ள விசேட குற்றத்தடுப்புபிரிவு சுற்றி வளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்றும் உத்தவிடப்பட்டுள்ளது.

(உ-8)


உ
அம்பாள் துணை



கச்சேரி – நல்லூர் வீதி, பாணன்குளம் நாச்சி அம்மன் ஆலய

வருடாந்த மஹோற்ஸவ விஞ்ஞாபனம்

சித்திரபானு வருஷம் - 2003

அம்பிகை அடியார்களே!

நிகழும் சித்திரபானு வருஷம் மாசித்திங்கள் ௨௨ம் நாள் (௦6 – ௦3 – ௨௦௦3) வியாழக்கிழமை முதல் பங்குனித்திங்கள் 6ம் நாள் (௨௦ – ௦3 – ௨௦௦3) வியாழக்கிழமை வரையான (15) பதினைந்து தினங்கள் மஹோற்ஸவ விழாவும் தொடர்ந்து பூங்காவனம், வைரவர் சாந்தி, அன்னதானம் என்பனவும் நடைபெற திருவருள் பாலித்துள்ளது. தினமும் அடியார்கள ஆலயத்திற்கு வருகை தந்து தேவியை வணங்கி அம்பிகை அருளைப் பெறுவீர்களாக.

மஹோற்ஸவ கால நேரங்கள்

| | |
|---|---|
| கொடியேற்றம் | : 06 – 03 – 2003 வியாழக்கிழமை காலை 10.00 மணி |
| தினசரி உற்ஸவம் | : காலை 9.30 மணி – மாலை 5.00 மணி |
| மஞ்சம் | : 15 – 03 – 2003 சனிக்கிழமை மாலை 5.00 மணி |
| வேணுகோபாலர் உற்ஸவம் | : 17 – 03 – 2003 திங்கட்கிழமை காலை 6.00மணி |
| சப்பரம் | : 18 – 03 – 2003 செவ்வாயக்கிழமை மாலை 5.00 மணி |
| தேர் உற்ஸவம் | : 19 – 03 – 2003 புதன் கிழமை காலை 8.00 மணி |
| தீர்த்த உற்ஸவம் | : 20 – 03 – 2003 வியாழக்கிழமை காலை 9.00 மணி |
| பூங்காவனம் | : 21 – 03 – 2003 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி |
| வைரவர் உற்ஸவம் | : 22 – 03 – 2003 சனிக்கிழமை மாலை 4.00 மணி |
| அன்னதானம் | : 23 – 03 – 2003 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணி |

(C/5823)

- ஆலய பரிபாலன சபை.

விளம்பர அனுசரணை :

இ. ச. பேரம்பலம் சக நிறுவனம்

50, 52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 021- 2222988


## தரம் 5 புலமைப் பரிசில் வினாத்தாள் 04 விடைகள்

01. பலா, மா, வாழை
02. குளம், கிணறு
03. துலா, கப்பி
04. மிளகாய், வெங்காயம், பாகல், புடோல், கத்தரி
05. பாகல், புடோல்
06. மரம்
07. பயன்படுத்தினர்
08. உண்டு
09. (a) காய்
    (b) பாட்டியினுடையது
10. எலி
11. நெல்
12. துவாரம்
13. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
14. நாங்கள் ஒவ்வொரு பந்தியாக வாசிக்க வேண்டும்.
15. நாம் சிந்தித்து செயற்பட வேண்டும்.
16. நூலகம் .
17. மாம்பழம்
18. எட்டு + நூறு
19. நாடு + மக்கள்
20. செல்வங்களுள் சிறந்த செல்வம் கல்விச் செல்வம் அது ஈடு இணையிலாச் செல்வம்
21. தரை
22. நீர்
23. வான்
24. தண்டவாளம்
25. தரை
26. தரை
27. (4)
28. (5)
29. (3)
30. (1)
31. 108
32. 5
33. 10
34. 21
35. கனவுரு
36. நான்கு
37. (1) 4210 (2) 1402
38. 500, 498
39. 3m,25cm
40. (3),(4)
41. (2)
42. (1)
43. (4)
44. (2)
45. (3)
46. புதன்
47. வெள்ளி
48. 25 பழங்கள்
49. 93
50. 72
51. பொருத்தமான விடை
52. பொருத்தமான விடை
53. பொருத்தமான விடை
54. தமிழ்
55. இலங்கை
56. நாய்
57. கிளி
58. கோழி
59. பசு
60. காகம்
61. பிழை
62. சரி
63. சரி
64. சரி
65. சரி
66. n
67. a
68. c
69. வெள்ளிக்கிழமை
70. நண்பன்
71. நாய்
72. Milk
73. Pen
74. Book
75. Eye

76. - 81 வரையான வினாக்களுக்கு சரியான எழுவாய் பயனிலையுடன் அமைந்த ஆறு வசனங்கள் எழுதப்படல் வேண்டும். ஒவ்வொரு வசனமும் ஆகக் குறைந்தது நான்கு சொற்களை யாவது கொண்டிருத்தல் வேண்டும்.

# அடிப்படை வசதிகளற்ற பாடசாலைகளின் அபிவிருத்திக்கு இயன்றளவு உதவுவேன்

## அமைச்சர் மகேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகள் புனரமைப்பு வேலைகளுக்கு நிதி ஒதுக்குவதில் இனி தமது அமைச்சு முக்கிய கவனம் செலுத்தாது என இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் பாடசாலையின் அதிபர்வ.ஆறுமுகம் தலைமையில் இடம்பெற்றது.


இந் நிகழ்வில், முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர் தி. மகேஸ்வரன் மாணவர்களின் கணனி அறிவை மேம்படுத்தும் நோக்கில் இரு கணனிகளை சம்பிரதாயபூர்வமாக கையளித்து உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் அங்கு தொடந்தும் உரையாற்றுகையில்,

எமது அமைச்சு இதுவரை இராணுவ நடவடிக்கைகளினால் கடுமையாகச் சேதமடைந்த பாடசாலைகளை இனம் கண்டு அவற்றைத் துரிதமாகப் புனரமைத்து மாணவர் கற்க வழிவகை செய்து வந்தது.

இனிவரும் காலங்களில் அவ்வாறில்லாது அடிப்படை வசதிகள் அற்ற பாடசாலைகளை இனம் கண்டு அவற்றின் முன்னேற்றத்திற்கு உதவும்.

இதன் மூலம் குடாநாட்டுக் கல்வித் தரத்தை மேன் நிலைக்கு இட்டுச் செல்ல முடியும் என்பதில் எனக்கு



நம்பிக்கை உண்டு என்று தெரிவித்தார். (உ)

இந்தியன் ஓயில் கூ. தா.

# எரிபொருள் சில்லறை வியாபாரத்திலும் ஈடுபாடு

(கொழும்பு)

இந்தியன் ஓயில் கூட்டுத்தாபனம், கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பும்வியாபார நடவடிக்கையில் ஈடுபடத்திட்டமிட்டுள்ளது.

திருகோணமலை எண்ணெய்க் குதங்களை குத்தகைக்குப் பெற்றுள்ள இந் நிறுவனம் எரிபொருள் சில்லறை வியாபாரத்திலும் ஈடுபட்டுவருகிறது.

கட்டு நாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் எரிபொருள் களஞ்சியம் ஒன்றை அமைத்து அங்கு விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பும் விற்பனை நிலையத்தையும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஓயில் கூட்டுத்தாபன உயர்அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (இ-8)

## பலன்ஸ் ஸ்ரைல் நடவடிக்கைபூர்த்தி

(கொழும்பு)

இரு மாதங்களாக இடம்பெற்று வந்த இலங்கைப் படையினருக்கு பயிற்சி வழங்கும் 'பலன்ஸ் ஸ்ரைல்' நடவடிக்கை கடந்த வாரம் நிறைவடைந்துள்ளது.

இலங்கைப் படையினருக்குப் பயிற்சி வழங்கும் இந்த நடவடிக்கையில் 60 அமெரிக்கப்படையினர் ஈடுபட்டிருந்தனர்.

தென்னிலங்கையின் பல பகுதிகளிலும்கெரில்லா யுத்தமொன்றினைக்கையாள்வது, நவீன ஆயுதங்களைக் கையாள்வது, நவீன யுத்த தந்திரோபாயங்களைஉள்ளிட்டபல்வேறு பயிற்சிகள் இந் நடவடிக்கையின் கீழ் வழங் கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத் தக்கது. (உ)

# நெடுந்தீவில் நிலைகொண்டுள்ள கடற்படையினர் முகாம் விஸ்தரிப்பு முயற்சிகளில் ஈடுபடுகின்றனர்

## தடுத்து நிறுத்துமாறு நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் கோரிக்கை

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் நிலை கொண்டுள்ள படையினரின் பனை மரங்கள் தறித்து புதிய காவலரண்கள் அமைக்கும் நடவடிக்கையினை தடுத்து நிறுத்த ஆவன செய்யக் கோரி நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி. இளம்பரிதிக்கு அவசர கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

இக் கடிதத்தின் பிரதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. விநாயகமூர்த்தி, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ. பத்மநாதன்,தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் ,சு.ப.தமிழ்ச் செல்வன் ஆகியோருக்கும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கும் அனுப்பிப்பவைக்கப்பட்டுள்ளன.

மேற்படி கடிதத்தின் விபரம் வருமாறு;

நெடுந்தீவில் முகாம் அமைந்துள்ள கடற்படையினர் குடியிருப்புப்பகுதிகளை அண்டிய பிரதேசங்களில் பனை மரங்களைத் தறித்து புதிய காவல் அரண்களை அமைக்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர்.

இச்செயலானது மக்களை பீதிக்குள்ளாக்கியுள்ளது.

நெடுந்தீவின் முக்கிய வளமான பனைமரத்தை பாதுகாப்பதற்கு மக்கள் மிகவும் சிரமத்தின் மத்தியில் முயற்சிகள் மேற்கொண்டு வரும் இவ்வேளையில்,படையினரின் இச்செயலானது மிலேச்சத்தன மானதாக காணப்படுகின்றது.

மேலும் இச் செயலானது அப்பட்டமான யுத்த நிறுத்த மீறலாகும். இதனால் மக்கள் கடும் விசனத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

எனவே,இச் செயலை உடனடியாகத் தடுப்பதற்கு ஆவன செய்யுமாறு தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது. (உ)

## சமுர்த்தி வங்கித் திறப்பு

(திருநெல்வேலி)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கான சமுர்த்தி வங்கி நேற்று வல்வெட்டித்துறையில் திறந்து வைக்கப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், யாழ். மாவட்ட அரசாங்கஅதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (உ-43-52)

# சமாதான முயற்சிகளில் அவதானம் அவசியம் தவறின் நாடு பாரிய நெருக்கடிக்குள்ளாகும்

## பாதுகாப்பு அமைச்சர் அரசுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

சமாதான முயற்சிகளின் பலனாக அரசு தவறான முடிவை எடுக்குமானால் அது நாட்டை பெரும் நெருக்கடிக்குள்ளாக்கும் என பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அரசை எச்சரித்துள்ளார்.

மறைந்த முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் றஞ்சன் விஜயரட்ணவின் 12வது ஆண்டு நினைவு தின வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பாதுகாப்பு அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்குதொடர்ந்து உரையாற்றுகையில்,அமரர் றஞ்சன்விஜேரட்ண பாதுகாப்பு அமைச்சராக இருந்த போது அவர் கையாண்ட பல விடயங்கள் எனக்கு முன்மாதிரியாக அமைந்துள்ளன.

அந்தவகையில் பாதுகாப்பு தொடப்பான விடயத்தில் மிகவும் நிதானமாகவும் ,அவதானமாகவும் நடந்து கொள்கிறேன்.

அத்துடன், தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகளின் போது ஸ்ரீலங்கா அரசும் மிகவும் அவதானமாக நடந்துகொள்ள வேண்டும்.

நகர்வுகள் ஒவ்வொன்றும் நிதானமானதாக அமையவேண்டும்.

தவறினால் சமாதானம் என்ற பெயரில் நாடு சுடுகாடான வரலாறு தான் எஞ்சும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சமாதானத்தை நோக்கிய நகர்வுகளை உன்னிப்பாக அவதானித்து அதன் குறை நிறைகளைச் சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பு நாட்டு மக்கள் அனைவர்க்கும் உண்டு என்பதையும் சுட்டிக்காட்டினார். (உ)



## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/ ஆனைக்கோட்டைஅ.மி.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர்போட்டி இன்று புதன்கிழமை பி.ப.1.15 மணிக்குபாடசாலைமைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பாடசாலை அதிபர் சி.நாகையா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜும், சிறப்பு விருந்தினர்களாக சேவைக்கால ஆலோசகர் எஸ் கணேசலிங்கம், மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்க பொது முகாமையாளர் க. சற்குணலிங்கம் ஆகியோரும், கௌரவ விருந்தினராகஓய்வுபெற்றஅதிபர் ந.சிவபாதமும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-10)

# காலநிலை மாற்றம் பற்றிய சர்வதேச மாநாடு கொழும்பில்

## இன்று முதல் மூன்று தினங்கள்

(கொழும்பு)

கொழும்பு ரான்ஸ் ஏசியா ஹோட்டலில் இன்று முதல் எதிர் வரும் 7ஆம் திகதி வரை சர்வதேச மாநாடு ஒன்று நடை பெறவுள்ளது.

காலநிலை மாற்றம் தொடர்பான அனைத்து அரசாங்கங்களினதும் முறைகாண் ஆயம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

மேற்படி ஆயம் இச் சர்வதேச மாநாடுபற்றி அறிக்கை ஒன்றினையும் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், பச்சை வீட்டு வாயுக்கள் வெளியேற்றப்படுவதால்ஏற்படக் கூடியவிளைவுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் பூமியின் வெப்பநிலை 3 பாகையினால் அதிகரிக்கும்.

அத்துடன்,கடலின் நீர்மட்டம் 2010 ஆம் ஆண்டளவில் 50 சென்ரிமீற்றர் அளவில் உயர்ந்து விடும்.

புயல்,சுழல்காற்று போன்றவற்றால் அனர்த்தங்கள் ஏற்படும். வனங்கள்,வனாந்தரங்கள், சதுப்பு நிலங்கள் முகாமைத்து வப்படாத சூழல் அமைவு காலநிலை அழுத்தங்களுக்கு உள்ளாகும்.

இத் தகைய விடயங்கள் பற்றி எச்சரிக்கவும் அவற்றிற்கு பாதுகாப்புத் தேடவுமென காலநிலை மாற்றம் தொடப்பான சாசனம் 1992 இல் ஒப்பமிடப்பட்டது.

மேற்படி முறைக்கான ஆயம் உலகின் பல பாகங்களிலும் உள்ள 2ஆயிரத்திற்கும் அதிகமான தொழில்சார் நிபுணர்களைக் கொண்டுள்ளது.

உலகத்திற்கு விஞ்ஞான தொழில்நுட்ப,சமூக பொருளாதார ஆய்வுகளை இது வழங்கி வருகிறது அதன் அடிப்படையில், தீவிர கால நிலை மாற்றங்கள் வறிய நாடு களையே அதிகம் பாதிக்கும்.

கடும் புயல் போன்றவற்றினால் மனித அழிவுகள் ஏற்படலாம்.இலங்கை போன்ற நாடுகள இதனால் மிகவும் பாதிக்கக்கூடிய வாய்ப்புண்டு.

இது தொடர்பான ஆலோசனை கள் நடத்தப்பட்டு கண்டுபிடிப்புக்கள் வெளியிடப்படவுள்ளன. இலங்கை போன்ற நாடுகள் இதனால் குறிப்பிடத்தக்க நன்மைகள் அடைய முடியும். இலங்கை பேரான்ற தீவுகள் காலநிலை மாற்ற ஆய்வுக்கு உட்படுத் தப்படுகின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# பாலம்அமைத்தவுடன் கலாம் இலங்கை விஜயம் செய்வாராம்

(புதுடில்லி)

இலங்கை-இந்தியாவுக்கு இடையிலான பாலம் அமைப்பு நடவடிக்கை பூர்த்தியானதும் நிச்சயம் இலங்கைக்கு வருவேன் என்று இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் பிரதமர்ரணில்விக்கிரமசிங்கவிடம் தெரிவித்திருக்கிறாா.

அண்மையில் இந்தியாவுக்கு மூன்று நாள் விஜயம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இரு நாடுகளுக்கும் இடையிலான பாலம் அமைப்புக் குறித்துக் கலந்துரையாடிய வேளை இவ்வாறு குறிப்பிட்டார் ஜனாதிபதி கலாம்.அவர் மேலும் இது பற்றிக் கூறுகையில்,

இலங்கையில் எனது உறவினர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நேரில்சந்தித்துப் பேசவிரைவில் இலங்கைவருவேன்.

எனது மாமா முறையிலான ஒருவர் அடிக்கடி கடிதம் மூலம் என்னை இலங்கை வருமாறு அழைப்பதால் அவரைப் பார்க்க ஆவலாகவுள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

எப்போது வந்தாலும் வரவேற்கத் தயாராக இருப்பதாகவும், இந்த வருகை இலங்கைக்குப் பெருமை சேர்ப்பதாக அமையும் எனவும் பிரதமர் ரணில் அவ் வேளை கூறியுள்ளார். (உ)

# பொதுச் சந்தை வசதியின்றி வேலணை மக்கள் அவதி

(வேலணை)

வேலணைப் பிரதேசத்தில் பொதுச் சந்தை ஒன்று நிறுவுவதன் அவசியத்தை அப்பகுதிப் பொது மக்கள் சம்பந்தப்பட்ட பிரதேச சபையிடம் வலியுறுத்தியுள்ளனர்.

இப்பகுதியில் பொதுச் சந்தை ஒன்று இன்மையால் பொருட்களை வாங்குதல், விற்றல் நடவடிக்கைகளுக்கு பொது மக்கள் மிகுந்த சிரமப்படுகின்றனர்.

அத்துடன், இப்பகுதியில் தெருவோரங்களில் வைத்து கூடிய விலைக்கு மீன்கள் விற்கப்படுவதாகவும் இதனால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (உ-47)

## இன்று ஒரு தகவல்

# மனித நம்பிக்கை

நம்பிக்கை இல்லையென்றால் இந்த உலகத்தில் நாம் நடமாடவே முடியாது. அவநம்பிக்கையோடு இருந்து கொண்டிருந்தால் என்றைக்கும் அவஸ்த்தை தான்! நாம் நம்புவது நடக்கிறதோ இல்லையோ அது வேறு விஷயம். ஆனால் எதையும் நம்பித்தான் நாம் அடிவைக்க வேண்டியிஷருக்கிறது. வேறு ஒன்றும் வேண்டாம் ஒரு லொத்தர் சீட்டு வாங்குகிறோம். அது எங்கே நமக்கு விழப்போகிறது. என்ற அவநம்பிக்கையோடு வாங்குகின்றோம். முதல் பரிசு நமக்குத் தான் என்கின்ற நம்பிக்கை உள்ளூர இருக்கத்தான் செய்கிறது. இருந்தாலும் முடிவு வேறு விதமாக ஆகிவிடுகிறது. அதற்காக மனம் தளர்ந்து போவதில்லை. அடுத்தமாதமும் சீட்டு வாங்குகிறோம். இந்த நம்பிக்கைதான் மனித வாழ்வுக்கு ஆதாரம்.

ஒரு கடையில் போய் தேனீர் அருந்துகிறோம். அந்தத் தேநீர் நல்லது தானா அதில் விஷம் கலந்திருக்குமா? என்கின்ற சந்தேகம் வந்து விட்டதென்று வைத்துக் கொள்ளுங்கள். அதன் பின்னர் அதை எப்படி நீங்கள் பருக முடியும்? நம்பித்தான் பருக வேண்டும். ரயில் ஒழுங்காகப் போய்ச்சேரும் என்கிற நம்பிக்கை இருப்பதானாலேதான் அதில் ஏறி உட்காருகிறோம். கடிதம் ஒழுங்காகப் போய்ச் சேரும் என்கிற நம்பிக்கை இருப்பதனாலேயே தான் பெட்டியில் போடுகிறோம்.

சரி! நமது கதைகள் நம்முடன் இருக்கட்டும். மனித நம்பிக்கை எந்தளவுக்கு உறுதியாகவும், அறிவு பூர்வமாகவும் இருக்கவேண்டும் என்பதற்கு அலெக்சாண்டர் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தை உதாரணமாகச் சொல்லாம். இந்த உலகத்தையே ஜெயிக்க வேண்டும் என்று புறப்பட்டார் அலெக்சாண்டர். ஒரு கட்டத்தில் அவர் சிட்னஸ் நதிக்கரைக்கு வந்து சேர்ந்தார். அந்தச் சமயத்தில் அவருக்குக் கடுமையான நோய் வந்து விட்டது. அவருடன் வந்திருந்த கிரேக்க வைத்தியர்கள் என்னென்னவோ முயற்சிகள் எல்லாம் பண்ணிப் பார்த்தார்கள் இருந்தாலும் அலெக்சாண்டருக்கு வந்திருப்பது என்ன நோய் என்பதை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏனென்றால் அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு மட்டுமே அதிகமாக வரக்கூடிய ஒரு விநோதமான நோயாக அது இருந்தது.

ஆனால் அவர் இருக்கும் இடம் எதிரியின் இடம். பாரசீக மன்னனுடைய ஆளுகைக்கு உட்பட்ட இடம். என்ன பண்ணுவது என்று எல்லோரும் யோசித்தார்கள் 'பாரசீக மன்னனுடைய அரண்மனையில இருக்கின்ற வைத்தியர் வந்தால் இந்த நோயைக் குணப்படுத்தி விடுவார்' என்று சொன்னார்கள். இருந்தாலும் எதிரியின் நாட்டில் இருக்கிற வைத்தியரைக் கூப்பிட்டு எப்படி நம்பி வைத்தியம் பார்க்கச் சொல்வது? எல்லாரும் தயங்கி 'பரவாயில்லை! அழைத்துக் கொண்டு வாருங்கள' என்று சொல்லிவிட்டார். உடனே அவரை அழைத்துக் கொண்டு வந்தார்கள்.

அவர் வந்து அலெக்சாண்டரின் உடலைப் பரிசோதனை பண்ணிப் பார்த்தார். 'சரி இதைக் குணப்படுத்தி விடலாம் பயப்படவேண்டியதில்லை ஆனால் இதற்கு ஒரு மூலிகை ரசம் தயார் பண்ணிக் கொடுக்க வேண்டும். நான் போய் அதைத்தயார் பண்ணிக் கொண்டு இரண்டு நாட்களில் திரும்பி வருகின்றேன்' என்று சொல்லிவிட்டுப் போனார். அந்த வைத்தியர் அதேமாதிரி இரண்டு நாட்களில் மூலிகை ரசத்தோடு திரும்பி வந்தார். இதற்கிடையில் அலெக்சாண்டரின் தளபதிகளில் ஒருவன் இரகசியமாக ஒரு எச்சரிக்கைக் கடிதம் கொடுத்தனுப்பியிருக்கிறான். அதை வாங்கி என்ன விஷயம் என்று பார்த்தார்.

'இப்பொழுது உங்களிடம் வந்திருக்கபிற எதிரி நாட்டு வைத்தியரை நம்பாதீர்கள் அவர் கொண்டு வந்திருக்கிற மூலிகை ரசத்திலே விஷம் கலந்திருக்கிறது. என்று அதில் எழுதியிருந்தது. அக்கடிதத்தைப் பார்த்த அலெக்சாண்டர் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளவில்லை. வைத்தியர் கொடுத்த மருந்தை வாங்கிக் கடகட வென்று குடித்து விட்டார். குடித்தபின்னர் கடிதத்திலிருந்த விஷயத்தை அந்தவைத்தியரிடமே சொன்னார். வைத்தியர் திகைத்துப் போய் விட்டார். தன்மேல் அலெக்சாண்டர் வைத்திருக்கிற நம்பிக்கையைப் பார்த்து வைத்தியர் உண்மையாகவே நல்ல மருந்தைத் தான் கொண்டு வந்திருந்தார். அதில் விஷம் எதுவும் இல்லை.

அதன் பின் அலெக்சாண்டர் அந்த வைத்தியரைப் பார்த்து நம்பிக்கை என்ற அச்சாணியை ஆதாரமாக வைத்துக் கொண்டுதான் இந்த உலகம் சுற்றிக்கொண்டிருக்கிறது. எனக்கு எதிரியாக இருந்தாலும் பாரசீக மன்னர் மிகவும் பெரியவர். அப்பேர்ப்பட்ட மன்னருடைய அரண்மனை வைத்தியர் தொழில் நேர்மையில்லாதவராக இருக்க மாட்டார். அப்படியிருந்தால் அவரை அரண்மனை வைத்தியராக வைத்திருக்கவே மாட்டார்கள் என்று நம்பினேன். என்னுடைய நம்பிக்கை வீண்போக வில்லை என்றார். இது தான் மானுட நம்பிக்கை என்பது!

இந்தக் காலத்திலும் இந்த மானுட நம்பிக்கையை மிகவும் சாமர்த்தியமாகக் கையாளுகின்ற கெட்டிக்காரர்கள் சிலர் இருக்கிறார்கள் இந்தக் காலத்துக்கு ஒருவர் அவருக்கு ஒரு சிஷ்யன் குரு முன்னால் அந்தச் சிஷ்யன் மிகவும் பணிவாக நின்று 'குருவே! உங்கள் கையால் விஷத்தைக் கொடுத்தாலும் அதை வாங்கி மடமடவென்று குடித்து விடுவேன் என்றான். உன்னுடைய குரு பக்தியை மெச்சினேன் என்றார் குரு. அதற்கு அந்த சிஷ்யன் அப்படியில்லை குருவே! உங்களிடம் சிஷ்யனாக இருப்பதை விட உங்கள் கையாலே விஷத்தை வாங்கிக் குடித்து விடுவது மிகவும் சிறந்தது. அதனால் தான் அப்படிச் சொன்னேன் என்றான்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# இலங்கையின் நிரந்தர சமாதானத்துக்கு மாலைதீவு பூரண ஆதரவளிக்கும்

## அந்நாட்டு ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் நிரந்தர சமாதானத்துக்கும் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கும் மாலைதீவு அரசாங்கத்தின் பூரண ஆதரவு எப்போதுமே கிடைக்கும என மாலைதீவு ஜனாதிபதி அப்துல்கையூம் தெரிவித்துள்ளார்.

கட்டாரில் நடைபெற்ற இஸ்லாமிய நாடுகள் அமைப்பின் உச்சிமாநாட்டில் கலந்து கொண்ட மாலைதீவு ஜனாதிபதி நாடு திரும்பிச் செல்லும் வழியில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சில நிமிடங்கள் தரித்து நின்ற போது செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

விமானநிலையத்தில் வைத்து இவரை வரவேற்ற வெளிவிவகாரப்பிரதி அமைச்சர் லால் தர்மஸ்ரீ ஹமகே அரசாங்கத்தால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளையும் அதன்பலனாக மக்களுக்குக் கிடைத்துளள பலன்பற்றியும் அவருக்கு விளக்கிக் கூறினார்.

இருவரும் உல்லாசப் பயணத்துறையின் சமகால மாற்றங்கள் பற்றி கருத்துக்களை பரிமாறிக் கொண்டதுடன். மாலைதீவு இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையில் குற்றவாளிகளை பரஸ்பரம் நாடுகடத்த வழிவகுக்கும உடனபடிக்கை குறித்தும் கலந்துரையாடியுள்ளனர்.

இவ்வுடன்படிக்கை விரைவில் கைச்சாத்திடப்பட வேண்டிய அவசியத்தையும் அப்துல்கையூம் பிரதி அமைச்சர் லால் தர்மஸ்ரீஹமகேயிடம விளக்கிக் கூறினார்.

இச்சந்திப்பில் ஜனாதிபதி செயலகத்தின் விசேடபிரதிநிதி, இலங்கைக்கான மாலைதீவின் உயர்ஸ்தானிகர் றொசிடாயோசப் ஆகியோரும் கலந்து கொண்டனர். (உ-8)

# அமெரிக்க தூதரகம் முன் ஆர்ப்பாட்டம் செய்ய ஈராக் தூதரகம் கையூட்டு வழங்கியதாம்

## புலனாய்வு அறிக்கையை அடுத்து பாதுகாப்பு பலம்

(கொழும்பு)

வளைகுடாவில் போர்ச்சூழல் உருவாகிவருவதனால் கொழும்பிலுள்ள அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் தூதரகங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக புலனாய்வு அறிக்கைகள் கிடைத்ததைத் தொடர்ந்து அவற்றின் பாதுகாப்புகள் பலப்படுத்தப்படுவதாக உள்த்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

தூதரகங்களின் முன்னால் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது என்ற பின்னணியில் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்பதால் இவ்வாரத்திலிருந்து விசேட கொமாண்டோப் பிரிவுகளும், பொலிஸ் பிரிவுகளும் காவலில் ஈடுபடும என்று அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில், கொழும்பிலுள்ள ஈராக்கின் தூதரகத்திலிருந்து குறிப்பிட்ட ஒரு அரசியற்கட்சி இரண்டு மில்லியன் ரூபா வைப்பெற்றுக் கொண்டு அமெரிக்கா வுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்து வருவதாகப் புலனாய்வு அறிக்கைகள் கிடைத்துள்ளன.

குறித்த பணத்தைப் பெற்றுக் கொண்ட அரசியற்கட்சிகள், அதன் பிரதிநிதிகள் ஆகியோரின் விபரங்கள் ஜனாதிபதிகுமாரதுங்கவிடமும், பிரதமரிடமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இயற்கை வளங்கள், பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகளுக்கான அமைப்பு ஈராக்கிற்கெதிரான அமெரிக்காவின் தாக்குதல்களுக்கெதிராக மார்ச் 8ஆம் திகதி ஆர்ப்பாட்டங்களை நடத்தவிருக்கிறது.

ஈராக்கின் ஆயுதங்களைக் களைவது, சதாம்ஹுசைனை பதவியிலிருந்து இறக்குவது உட்பட மறைவில் பல பொருளாதாரத் திட்டங்கள் யுத்த ஏற்பாடுகளின் பின்னணியில் இருப்பதாக அந்த அமைப்பின் ஏற்பாட்டாளர் வண.பியரத்னதேரர் தெரிவித்துள்ளார். (உ)

# அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சனியன்று வவு.விஜயம்

(வவுனியா)

அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் எதிர்வரும் சனிக்கிழமை 2 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு வவுனியா செல்லவுள்ளார்.

வவுனியா செல்லும் இவர் அங்கு வர்த்தக சங்கப்பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசவிருப்பதாக வவுனியா மாவட்ட வர்த்தக சங்கத்தலைவர் வீ.எஸ் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஜீ.எஸ்.பீரிஸ் வவுனியாவிற்கு விஜயம் மேற்கொண்டது



இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-10)

## இராசி பலன்

**05.03.2003**
**(மாசி 21, புதன்)**

துதியை மு.ப 11.27 வரை
உத்தரட்டாதி பி.ப 3.58வரை
இராகுகாலம் 12.26 - 1.56
சுபநேரம் 4.56 - 6.26

**விபுதிப் புதன்**

**மேடம்**
தனவிரயம், கீழ்ப்படிதல், சோம்பல், காரிய தாமதம்.

**இடபம்**
சினேகிதர் வருகை, போசனசுகம், மனமகிழ்ச்சி, காரியஅனுகூலம்.

**மிதுனம்**
எடுத்தகாரியம் கைகூடும், நன்கொடை, ஆரோக்கியம், கடினமுயற்சி.

**கடகம்**
திர்ப்பந்தம், பொருள்சேதம், தேசாந்திர வாசம், உத்தியோக கஷ்டம்.

**சிங்கம்**
வியாதி, மனக்கவலை, முயற்சி தாமதம், எதிர்ப்பு.

**கன்னி**
மனோசவுக்கியம், கீர்த்தி, பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம்.

**துலாம்**
ஆரோக்கியம், விரும்பிய பொருள் சேரல், ஸ்திரி சுகம், முயற்சி பலிதம்.

**விருச்சிகம்**
பணக்குறைவு, வழிநடத்தல், தாழ்ந்த சுபாவம், முயற்சி தடங்கல்.

**தனுசு**
தனநாசம், மனச்சஞ்சலம், சத்துருஜெயம், புதியஇடம்போதல்.

**மகரம்**
நற்கீர்த்தி, மாதர் நட்பு, உடல்நலம், கூட்டு முயற்சி.

**கும்பம்**
மனோசங்கடம், அதிகசெலவு, கௌரவக்குறைவு, விவாதம்.

**மீனம்**
வெகுமானம், விருந்துபசாரம், புதிய பொருள் சேர்க்கை, நல்லமுயற்சி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# ஒரு தொகுதி தளபாடங்கள் எடுத்து வரப்பட்டன

(யாழ்ப்பாணம்)

போரினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு வழங்குவதற்கென ஒருதொகுதி தளபாடங்கள் யாழ். செயலகத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

நிக்கொட் உதவித்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 60பாடசாலைகளுக்கு இத் தளபாடங்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

மேற்படி தளபாடங்கள் முற்று முழுதாக வந்து சேர்ந்ததும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கான விநியோகப்பணி ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-4)

# 10 மாதிரிக் கிராமங்கள் புனர்வாழ்வுக் கழகத்தால் தெரிவு

(தென்மராட்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் யாழ். மாவட்டத்தில் மேலும் பத்துக்கிராமங்களை மாதிரிக் கிராமங்களாகச் செயல்படுத்தத் தெரிவு செய்துள்ளது.

இதன் பிரகாரம் வாதரவத்தை, நீர்வேலி மேற்கு, அரியாலை மத்தி, கொட்டியாவத்தை, தாவடிமேற்கு, ஈவினை, மிருசுவில் வடக்கு, திருநெல்வேலி பாற்பண்ணை குடியிருப்பு, குட்டியபுலம், சாந்தை ஆகிய கிராமங்களே தெரிவு செய்யப்பட்டவைகளாகும்.

இதனைவிட, தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் ஏற்கனவே கல்வயல், சந்திரபுரம் ஆகிய இரு கிராமங்களும் மாதிரிக் கிராமங்களாகத் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-77)

## மெய்வன்மைப் போட்டி

(புத்தூர்)

யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பி.ப 2மணிக்கு அதிபர் செல்வி செ.வஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் யோ.ரவீந்திரன் கலந்துகொள்ளவுள்ளார். (உ-69)

*கொலை மேற்கொண்டாரிற் கொடிதே அலை மேற்கொண்டு
அல்லவை செய் தொழுகும் வேந்து*
—குறள்—

# வலம்புரி

## சமாதானத்திற்கு கேடாகலாம்

களுத்துறைச்சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளில் 41 பேர் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

தம்மை விடுதலை செய்ய வேண்டும் அல்லது தம்மீது வழக்கு விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளுடன் கைதிகளின் உண்ணாவிரதம் தொடர்கிறது.

தென்னிலங்கை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க்கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் இதுதான்முதற் தடவையல்ல, தம்மை விடுவிக்கக் கோரி பல தடவைகள் தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

அவர்களின் உண்ணா விரதப் போராட்டங்களை நிறுத்துவதற்காக பாராளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் சிறைக்குச செல்வார்கள்.

அங்கு விடுதலை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி மொழிவழங்குவார்கள்.அதனை நம்பி கைதிகளும் உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடுவார்கள்.அன்றோடு அந்த விடயம் மூடப்பட்டு விடும்.

இப்படியாக தென்னிலங்கை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் பரிதாப நிலை தொடர்கிறது.விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தார்கள், அவர்களுக்கு ஆதரவாகச்செயற்பட்டார்கள் என்ற பல் வேறு குற்றச் சாட்டுக்களின் பேரில் கைதாகிப் பல வருடங்களாக சிறையில் வாடுகின்ற கைதிகளின் நிலைபற்றி இது வரை எவரும் அக்கறை காட்டவில்லை.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி சமாதானப்பேச்சுக்களும் நடந்து கொண்டிருக்கும் போது புலிகளுக்கு ஆதரவு வழங்கினார்கள் என்ற குற்றச்சாட்டில் தமிழ்க்கைதிகள் தொடர்ந்தும் சிறைகளில தடுத்து வைக்கப்பட்டிருப்பது எவ் வகையிலும நியாயமாகாது. நாட்டில் இருபது வருட கால யுத்தம் ஓய்ந்து சமாதானம் நிலைக்க வேண்டுமானால வெறுமனே துப்பாக்கிகளுக்கு மட்டும் ஓய்வு கொடுப்பது மட்டுமல்ல,நாட்டில் வாழுகின்ற ஒவ்வொரு பிரஜைகளும் நிம்மதியாக வாழவேண்டும்.

இனப்பிரச்சினை காரணமாக நாட்டின் எங்கோர் மூலையில் மனிதங்கள் கண்ணீர் வடிக்குமாயின் அதனை சமாதானச் சூழ்நிலையாக கருதமுடியாது அதேபோன்றுதான் தென்னிலங்கைச் சிறைகளில் வாடுகின்ற தமிழ்க்கைதிகளின்நிலை.

நாமெல்லாம் சமாதானத்தின் விசிறல்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் போது சிறைகளுக்குள்- இருண்ட உலகத்திற்குள் கண்ணீர் வடிக்கின்ற பரிதாபம் நாட்டில் நிரந்தர சமாதானத்திற்கு ஊறுவிளை வித்து விடலாம்.

# பண்பாடுகளும்- -பாரம்பரியங்களும்

வெகு காலத்துக்குப் பிறகு ஒரு நண்பரைக் கண்டேன்.

"வணக்கம் ஐயா! எப்படி இருக்கிறீர்கள்" என்றேன்.

அவர் எனக்கு திரும்பி வணக்கம் சொல்லுவார் என்று எதிர்பார்த்தால்... "என்ன வணக்கம் எல்லாம் பலமாக இருக்கிறதே. தேர்தலுக்கு ஏதும் நிற்கிற யோசனை யோ!" என்று கிண்டலாகக் கேட்டார்.

வணக்கம் சொல்பவர்கள் எல்லாருமே தேர்தலுக்கு நிற்கிறவர்கள் தானா என்ன?

## அன்றும் இன்றும்

தேர்தலுக்குப் போகிறவர்கள் வணக்கம் என்று வாயால் மட்டும் சொல்லிவிட்டு இருந்துவிடமாட்டார்கள். வாயெல்லாம் பல்லாக, வளைந்து குனிந்து கும்பிடு போட்டுக் கொண்டல்லவா வருவார்கள்.

வணக்கம் என்ற சொல் சமீபகாலத்தில் தான் புழக்கத்திற்கு வந்தது. அந்தக் காலத்தில் "நமஸ்காரம்" என்பது தான் வழக்கம்.

பொதுக் கூட்டங்களில் பேச எழுந்திருப்பவர்கள் தலைவர் அவர்களே என்றல்லவா ஆரம்பிக்கிறார்கள் அந்தக் காலத்தில் அக்கிராசனர் அவர்களே என்பார்கள்.

அது இருக்கட்டும் நண்பருக்கு வணக்கம் சொன்னேன் அல்லவா, அந்த நண்பர் வேறு யாரும் அல்ல. அந்தக் காலத்தில்தமிழ் பத்திரிகை ஒன்றில் பிரபலமான 'பத்தி' எழுத்தாளராக இருந்தவர். இப்பொழுது வெளிநாடுகள் எல்லாம் சென்று கையில் மடியில் காசு பணத்தோடு வந்து சேர்ந்திருப்பார் போலும்.

தலை பழுத்து, பல் விழுந்து தளர்ந்து போயிருக்க வேண்டியவர் ஜம்மென்று கட்டுமஸ்தான வாலிபர் போல காட்சியளித்தார். போதாக்குறைக்கு தலைக்கு டை அடித்திருப்பார் போல- கன்னங்கரேலென்று மயிர் சிலுப்பிக்கொண்டு இருந்தது.

வெளிநாட்டில் உழைத்துக் கொண்டுவந்தால் இப்படித்தான் இருக்க வேண்டுமோ!

அதை விடுங்கள் அந்தக் காலத்தைப் பற்றி சொன்னேன் அல்லவா?

இவரைப் போல் தான் கொழும்புப் பத்திரிகைகளில் ஊர்க்குருவி, வானம்பாடி, கண்டதும் கேட்டதும், போகிற போக்கில் என்ற தலைப்புக்களில் நல்ல 'பத்தி' எழுத்துக்கள் வருவதுண்டு.

யாழப்பாணத்திலும் கூட நாடும் நடப்பும் ஊர்சுற்றி, ஐயாறன், கண்ணாடி போன்ற தலைப்புக்களில் 'பத்தி' எழுத்தாளர்கள் வெழுத்து வாங்கினார்கள்.

அது என்னவோ அந்தக் காலத்துப் 'பத்தி' எழுத்து முறைக்கும், இந்தக் காலத்து 'பத்தி' எழுத்துக்கும் நிறைய வேறுபாடு உண்டு. இன்று எதையுமே 'சீரியஸாக' கையாளவேண்டி இருக்கிறது. அப்படியான ஒரு நிலைக்கு தள்ளப் பட்டு விட்டோம்.

அன்று எளிமையாகவும், சுவையாகவும் அன்றாட வாழ்க்கைச் சம்பவங்களை வாசகர்களுக்கு அவர்கள் தந்த விதமே அலாதி.

❋ ❋ ❋ ❋

ஆர்ட் புச் வால்ட் என்பவர் மேல்நாட்டுப் பத்திரிகைகளில் மிகப் புகழ் வாய்ந்த 'பத்தி' எழுத்தாளர். இவர் ஒரே சமயத்தில் பல்வேறு நாடுகளில் வெளிவரும் ஏராளமான பத்திரிகைகளுக்கு 'பத்தி' எழுத்தாளராக இருந்தார். அவரது எழுத்துக்களை இலங்கையில் டெய்லிநியூஸ் போன்ற பத்திரிகைகளும் ஒப்பந்தம் மூலம் பெற்று பிரசுரித்து வந்தன. அரசியல் பொருளாதாரங்களில் இலக்கியம் என்று எல்லா வகையான விடயங்களையும் தமக்கே உரித்தான நகைச்சுவை கலந்த பாணியில் எழுதி வந்தார்.

அமெரிக்கா, பிரிட்டன் என்று எந்த நாட்டு தலைவர் களையும் விட்டு வைக்காமல் தனது நகைச்சுவை எழுத்தினால் வாட்டி எடுத்துவிடுவார். அப்படியிருந்தும் அவருக்கு வரவேற்பும் மதிப்பும் இருந்தது. அவரது பேனை யின் கூரினால் குத்து வாங்காத அரசியல் தலைவரே இல்லை என்று கூறலாம். இருந்தும் அவர்கள் அவரை மதித்தார்கள். தாங்கள் நடத்தும் பத்திரிகையாளர் சந்திப்புக்கள் விருந்துகளுக்கு அழைக்காமலும் விடுவதில்லை. அவ்வாறு அழைத்தவர்களையே தமது நகைச்சுவை பாணியிலான எழுத்தின் மூலம் கிண்டல் செய்தும் எழுதுவார். அவர்கள் அந்த எழுத்தை இரசித்துப் படிப்பார்கள். நம் நாடுகளில் அப்படி ஏதும் தனிப்பட்ட முறையில் எழுதினால் என்ன நடக்கும் என்று நினைக்கிறீர்கள்? எழுதியவர் அடுத்த நாள் எங்கே இருப்பாரோ சொல்ல முடியாது ❋ ❋

இந்தப் படத்தில் இருப்பவர் எந்தவூர் வந்தவர் என்று நினைக்கிறீர்கள்? அவர் கையில் இருப்பது நாதசுரமா அல்லது கிளாரினட் வாத்தியமா?



இந்த நாதசுர வித்துவானை நீங்கள் கடந்த மாதம் 17 ஆம் திகதி கொழும்பில் பார்த்திருக்கலாம் பக்கவாத்தியமில்லாமலே பீப்பி என்று ஊதித்தள்ளி விட்டார் என்று பார்த்தவர்களும் கேட்டவர்களும் கூறுகிறார்கள். பக்கத்தில் நிற்பவர்கள் வாயைத் திறந்து கொண்டிருக்கிறார்களல்லவா? பக்க பாட்டு, பக்கவாத்தியம் அப்படி ஒன்றுமில்லை. தென்னங் கோலாகவிருக்குமோ அதுவுமில்லை.

இது அரசியல் கோஷம்!

எதிர்க்கட்சியினர் நடத்திய ஜனகோஷ நிகழ்ச்சி ஒன்றை எதிர்க கட்சித் தலைவர் திரு.மகிந்த ராஜபக்ஷ தான் இவ்வாறு நாதசுர வித்துவானாக மாறியிருந்தார். அந்தப் படம் தான் இது.

நாதசுரம் என்று சொன்னதும் எனக்கு ஒரு நினைவு வருகின்றது.

அந்தக் காலத்தில் வித்துவான்கள் வாசிக்கத்தொடங்கினால் கச்சேரியை முடித்துக் கொண்டுதான் ஏதாகிலும் துக்கடாக்களை வழங்குவார்கள். சில சமயம் சினிமா வில்லரும் புதிய ராகங்களும் இளைஞர்களுக்கு இதமளிக்கும்.

இப்போது எப்படி? சொல்ல வேண்டாம் பழைய பாரம்பரியங்களை அப்படியே பின்பற்றுபவர்கள் இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால் புதிய சினிமாப் பாடல் ஒன்றையாவது இழுத்துவிடாவிட்டால் அவருக்கு மவுசு இருக்காது. வித்துவான்களைக் குறை சொல்லிப் பயன் இல்லை. காலம் அப்படி.

நம் இளைஞர்களின் இரசனை வளர்ந்துள்ள, வளர்க்கப்பட்டுள்ள முறைகள் அப்படி.❋ ❋

சுவாமி வீதி உலாவுக்குப் புறப்படுகிறார். பெரிய வித்துவான் ஒருவர் பிரமாதமாக வாசிக்கத் தொடங்குகிறார். தியாகையரின் கீர்த்தனை தான். ஆகா, காதுக்கும் கருத்துக்கும் எவ்வளவு சுகமாக இருக்கிறது. கிழக்கு வீதியில் ஆரம்பித்து தெற்கு வீதி கடந்து மேற்கு வீதியில் வாசிப்பு களைகட்டி ரம்மியமாக ஒலிக்கிறது.

இவ்வளவுக்கும் அந்தத் தெய்வ கானத்தைக் கேட்டுக்கொண்டு இருந்தவர்கள் யார் என்று நினைக்காதீர்கள்- இதை எழுதிக்கொண்டிருக்கிற நானும்- தீவட்டி சுமந்து கொண்டிருந்த பையனும் தான். மனிதர்கள்-மற்று எல்லாருமே வேறு வேறு காரியங்களில் கவனம். நிச்சயமாக சப்பரத்தில் அமர்ந்திருந்த முருகப் பெருமானும் வள்ளி, தெய்வயானை பிராட்டிமாரும் மூர்த்திகள் வடிவில் கேட்டுக்கொண்டிருந்திருப்பார்கள். தேவகானமல்லவா! எவ்வளவு இன்பம்.

உபயகாரர் ஓர் இளைஞர். வடக்கு வீதியில் வித்துவான் தாம் வாசிப்பில் மிக உன்னத நிலையில் சஞ்சரித்துக் கொண்டிருக்கையில் அவர் காதில் வந்து ஏதோ சொல்கிறார்....

வித்துவான் உடனே பூமியில் தொப்பென்று குதித்து விடுகிறார். சங்கீத சஞ்சாரமெல்லாம் தவிடு பொடியாகி விடுகிறது. "பழமுதிர் சோலை எனக்காகத்தான்.....டும் டும் டும்...." விளாசித்தள்ளுகிறார்கள்.

காலம் இப்படி- இளைஞர்களின் கோலம் இப்படி- வித்துவான்களும் இப்படி மாறலாமா?

பணம் பேசுகிறது. இல்லையென்றால் அடுத்த விழாவுக்கு ஆளையே மாற்றி விடுவார்களே!

எதுவானாலும் முறையாகப் படித்த இசையை முறையாக வாசித்த கீர்த்தனையை கேட்க ஆள் இல்லாவிட்டாலும் தெய்வம் கேட்டுக் கொண்டிருக்கிறதே என்று உள்மனம் பேசவேண்டும்.

காலம் மாறுகிறது. கருத்தும் மாறுகிறது. ஆனால் பாரம் பரிய விழுமியங்களை முன்னேற்றுவதில் பிழையில்லை. முறித்து நசுக்கி விட்டால் அவைகளின் தெய்வீகம் மறைந்து போகும் நமது பண்பாடுகளும் அடையாளங்களும் எல்லாம் மறைந்து விடும் அல்லவா?

வணக்கம் இன்னொரு நாள் சந்திப்போம்-அன்பன்

## அறிவுறுத்தல் உதாசீனம்

(கல்வயல்)

கொடிகாமம் பேருந்து நிலையம், அதற்கு எதிரேயுள்ள வேப்பமரப் பக்கமுள்ள கடைத்தொகுதி ஆகியவற்றுக்கு முன்னால் தனியார் வாகனங்கள் நிறுத்தக்கூடாது என்ற அறிவித்தல் பலகையை சாவகச்சேரி பிரதேச சபை நாட்டியுள்ளது.

இதையும் மீறி இவ்விடங்களில் தனியார் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் போக்குவரத்துச் சிரமங்கள் பொதுமக்களுக்கு ஏற்படுகின்றது.

கடைகளுக்கு முன்னால் வரிசையாக வாகனங்கள் வாசலை மறைத்து நிறுத்தப் படுவதால் வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்படுகிறது. (உ-111)

## புத்தகங்கள் அன்பளிப்பு

(வேலணை)

வேலணை கிழக்கு ஐக்கிய உதயமால் சனசமூக நிலையத்திற்கு 6 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

வேலணை கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்களையும், போரூட் நிறுவனம் ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்களையும் அன்பளிப்புச் செய்துள்ளன. (உ-47)

### காமன்வெல்த் பத்திரிகை சங்கக் கூட்டத்தில்

# ஒஸாமாவை காந்திஜிக்கு ஒப்பிட்டுப் பேசினார் அரபுப் பத்திரிகையாளர்

(கோட்டை)

காமன்வெல்த் பத்திரிகை சங்க மகாநாட்டில் பேசிய அரபுப் பத்திரிகையாளர் ஒருவர் பயங்கரவாதியாக கருதப்படும் ஒஸாமா பின்லேடன் மகாத்மாகாந்தி போன்ற ஒருவர் என்று குறிப்பிட்டுப் பேசினார். இந்தக் கருத்து உடனடியாகவே வேறு ஒரு பத்திரிகையாளரால் ஆட்சேபிக்கப்பட்டது.

லண்டனில் இருந்து வெளிவரும் அல்-கட்ஸ் அல்-அராபி என்ற பத்திரிகையின் ஆசிரியர் அப்துல் பாரி அட்வான் என்பவர் சபையில் பேசுகையில், அல்கெய்டா தலைவரை தாம் ஒரு சாதாரண விவேகமுள்ள மனிதராகவே கருதுவதாகவும் உலகத்தில் தேடப்பட்டு வரும் ஒரு பயங்கரவாதியாக தாம் அவரைக் கருதவில்லை என்றும் கூறினார்.

அவர் அதிக விவேகமான ஒரு மனிதராகத் தோன்றவில்லை. அவர் ஒரு சாதாரண மனிதர். அவரிடம் நல்ல குணங்களும் இருக்கின்றன. மற்றவர்கள் பேசும் போது அவர் இடையில் குறுக்கிடமாட்டார். மற்றவர்கள் சொல்வதைக் கவனமாகக் கேட்பார். அவர் எனக்கு காந்தியைத்தான் நினைவூட்டுபவராய் இருந்தார். ஒரு நோக்கத்துக்காக சகலதையும் துறந்து விட்டவர் அவர் என்றார்.

அல்கெய்டா தலைவரை தாம் சந்தித்திருப்பதாகக் கூறிய அவர் லேடன் தனது நம்பிக்கையின் பொருட்டு அர்ப்பணங்களைச் செய்யவும் தயாராய் இருப்பவர் என்றார்.

இந்தக் கருத்து உடனடியாகவே பிரபல இந்தியப் பத்திரிகையாளர் குல்திப்நாயரால் கண்டிக்கப்பட்டது.

"இங்கே பிரசன்னமாய் இல்லாதவர்களை விவாதங்களுக்குள் இழுக்காதீர்கள்" என்று குல்திப்நாயர் கேட்டுக்கொண்டார்.

பாரி அத்வான் தொடர்ந்து பேசுகையில், ஒஸாமா பின்லேடன் அமெரிக்காவை விட மோசமாக ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசேனை வெறுக்கிறார். அதே சமயம் அமெரிக்க ஏவுகணைகள் ஈராக்குக்கு மேலாகப் பறப்பதை அவர் விரும்புவார். ஏனென்றால் அமெரிக்காவின் ஈராக் மீதான தாக்குதல் அரபு நாடுகளை அமெரிக்காவுக்கு எதிராகக் கிளப்பிவிடும் என்றார்.

அமெரிக்காவின் ஈராக் மீதான தாக்குதல் ஈரான் மீதும் பின்னர் திருப்பப்படும். அதன்பின் பாகிஸ்தானும் தாக்கப்படும் என்று அவர் கூறினார்.

(பி)

## தினசரி தியானம்

### செய்யவேண்டியவை

செய்கையில் உனக்குச் சுதந்திரம் உண்டு. உன் கர்மாவை நீ எந்த முறையிலும் செய்யலாம். சரியான சிந்தனை, சரியான செய்கை இவற்றின் மூலம் நீ ஒரு யோகி அல்லது ஞானி ஆக முடியும். மனிதன் உதவியற்ற அனாதையல்லன். அவன் எல்லாவற்றையும் உரிமையாக உடையவன்.

இப்பொழுது விழித்துக் கொள். நல்ல மனிதனாகு. நல்ல செயல்களைச் செய். விஷ்ணு பரமாத்மாவின் பெயர்பாடு. மகாத்மாக்களின் சத் சங்கத்தில் கலந்து கொள். உன்னுடைய தீய குணங்கள் உன்னை விட்டு அகலும். நீ இலட்சியத்தை அடைவாய்.

**சுவாமி சிவானந்தர்**

# எட்டுப் பேரின் சடலங்களை கண்டதும் மயக்கமுற்றேன்

## மிருசுவில் படுகொலையில் சாட்சியம்

(கொழும்பு)

கடந்த 2000ம் ஆண்டு டிசம்பர் 19ம்திகதி மிருசுவிலில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகள் சமபந்தமாக 5 இராணுவத்தினருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணை நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடை பெற்ற போது தொடர்ந்து சாட்சியம் அளித்துவரும் முக்கிய சாட்சியான பொன்னுத்துரை மகேஸ்வரன் அரச தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி சரத் ஜயமானவின் குறுக்கு விசாரணையின் போது அவர் சாட்சியம் அளிக்கையில்,

டிசம்பர் மாதம் 25ம் திகதி நீதிபதிகளிடம் என்னை அழைதது் சென்றார்கள்.அங்கு இறந்தவர்கள் 8பேரின் உடல்கள் கிடத்தப்பட்டிருந்தன.முதலாவது உடலைப பார்த்ததும் எனக்கு தலைச்சுற்று ஏற்பட்டது.நான் மயங்கிப் போனேன்.மயக்கம் தெளிந்து எழுந்த போது அது தெய்வகுலசிங்கத்தின் உடல் எனத் தெரிந்து கொண்டேன்.

அன்று விறகுவெட்ட வந்த ஏனையவர்களின் உடல்களை எனது தந்தையார் யார்,யாருடையது எனக் கூறினார்.2001 ஜனவரி 3ம் திகதி நடை பெற்ற முதலாவது அடையாள அணிவகுப்பில் மூவரைஅடையாளம் காட்டினேன். அவர்கள் இன்று நீதி மன்றத்தில் உள்ளனர் என்று தெரிவித்தார்.

டிசம்பர் 19ந்திகதி விறகு வெட்டச் சென்ற பொழுது ஓட்டிச்செனற துவிச்சக்கர வண்டிகள் நான்கும் நேற்று நீதிமன்றத்தில் சாட்சியினால் அடையாளம் காணப்பட்டன சாட்சியின் கண்களைக் கட்டிய சாரத்தையும் அவர் அடையாளம் காட்டினார்.(0)

# 51ஆயிரம் படையினா் தப்பியோடியுள்ளனர்

(கொழும்பு)

பாதுகாப்பு படையினரில் இது வரை 51ஆயிரம் பேர் படையில் இருந்து தப்பி ஓடிவிட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

படைகளில் இருந்து தப்பியோடுவோரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகத் தெரிவித்த சனத் கருணாரட்ண தப்பியோடுவோர் சட்டப்படி படைச் சேவையில் இருந்து விலகுவதற்கு உரிமை உண்டு என்றும் ஆனால் அவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களாக இருந்தால் அவர்கள் சட்டபப்டி விலகிச் செல்ல முடியாதென்றும கூறினார். (இ)


## நியாயவிலையில்!

உலகத் தரம் வாய்ந்த இத்தாலி நாட்டு தயாரிப்பு
DIESEL(YANMAR) ஜெனரேட்டர்கள்

| | |
|---|---|
| 4.2KVA | 165770/- |
| 5.5KVA | 219010/- |

மற்றும்,
**HERO STREAM MOTOR CYCLE 49CC RS 41 900/-**
(தலைக்கவசம்,வாகனப் பதிவு,காப்புறுதிப்பத்திரம் இன்றி செலுத்தலாம்)
**HERO STREAM 65CC MOTOR BIKE RS 46 300/-**
**HERO POWER 65CC MOTOR BIKE RS 47 950/-**
மேலும்,
No.01.தரத்திலான தேயிலையும் *(GLEN TEA)* 500g பைக்கற் **Rs 87.50** விற்பனைக்குண்டு
முகவரி: –
STS அரசகாட்சியறை,
இல.07, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(6597)



## எழுத்தாளர் சபை

இளம்எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், இலைமறைகாயாக உள்ள எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும்நோக்கத்துடனும்,புதிய எழுத்தாளர்களை உருவாக்கும் எண்ணத்துடனும்

வலம்புரி - சங்குநாதம்

தனது அடுத்த பணியாக ;

எழுத்தாளர் சபையை அமைக்கவுள்ளது. இதில் உறுப்பினர்களாகச் சேர விரும்பும் ஆர்வமுடையவர்கள்,தங்கள் விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

எழுத்தாளர் சபை
வலம்புரி
இல-15,வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

உங்கள் விண்ணப்பத்துடன் பின்வரும் கூப்பனைத் தவறாது இணைத்து அனுப்பவும்.

### வலம்புரி ~சங்குநாதம் எழுத்தாளர் சபை

அலுவலகப் பாவனைக்கு
அங்.இல :

முழுப்பெயர் :
தபால் முகவரி :
பிறந்த திகதி :
தே.அ.அ.இல :
புனைபெயர்(இருப்பின்):


## அரசறிவியல் கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் இன்று காலை 10மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அரசறிவியல் கருத்தமர்வு நடைபெறும்.

இந் நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் கலந்து கொள்வார்கள். (ந)

## வரவேற்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவன முதலாம் வருட மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு இன்று காலை 9.30மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இவ் வரவேற்பு நிகழ்வு முற்பகல் 11மணிக்கு ஆரம்பமாகும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது (த)

## கச்சதீவுக்கு இன்று விஜயம்

(நெடுந்தீவு)

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த உற்சவத்திற்கான ஏற்பாடுகளை மேற் கொள்வதற்காக இன்று நெடுநதீவில் இருந்து அருட்தந்தை ஜெபநேசரட்ணம் மற்றும் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் எஸ்பேரானந்தம தலைமையிலான குழுவினர். கச்சதீவுக்குச் செல்லவுள்ளனர்.

தேவாலயப் பகுதியில் துப்புரவுப் பணிகளை மேற் கொண்டு, கொட்டில்கள் அமைப்பதுடன், தற்காலிக மலசல கூடம்அமைப்பு, நன்னீர் சேகரிப்புஆகிய நடவடிக்கைகள மேற்பார்வை செய்வதுடன் ,உற்சவத்திற்கான ஏற்பாடுகளையும் மேற் கொள்ளவுள்ளனர். (இ-48)

# களுத்துறை கைதிகளின் போராட்டம் தொடர்கிறது

## ஏழுபேர் மயக்கம்;பலர் உடற் சோர்வு

(களுத்துறை)

களுததுறை சிறைக்கைதிகளின் உணணாவிரதப் போராட்டம் நேற்று நான்காவது நாளாகவும் தொடர்ந்து இடம் பெற்றது.

தமது விடுதலையை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபடும் கைதிகளில் ஏழுபேர் மயக்கமடைந்திருப்பதாகவும்,பலர் உடல் சோர்வடைந்த நிலையில் இருப்பதாகவும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை களுத்துறைக் கைதிகளின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நீர்கொழும்பு மற்றும் சிறைச்சாலைக் கைதிகள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர். (இ)

## ஊடகவியலாளர் தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு விசாரணை மே–2இல்

(திருநெல்வேலி)

கடந்த டிசம்பர் மாதம் 10ம் திகதி நெல்லியடிப் பகுதியில் பொது மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலில் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் வே.தவச்செல்வன் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு எதிர்வரும் மே மாதம் 2ம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான மார்க் பெர்ணான்டோ,டி.எஸ். குணசேகரா,கே.விக்கினேஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை இடம் பெறவுள்ளது.

நெல்லியடிப் பொலிஸ் பொறுப்பதிகாரி யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரை மே 2ம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

வழக்காளி சார்பில் சட்டத்தரணிகள் அ.விநாயகமூர்த்தி, ஜீ.ஜீ.கஜேந்திரகுமார் ஆகியோர் வாதிடவுள்ளனர். (உ-43)

## உறவினர்களிடையே கைகலப்பு கத்திவெட்டில் முடிவு

### மூவர் படுகாயம்

(புத்தூர்)

உறவினர்களுக்கிடையே ஏற்பட்ட வாயத்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் ஒரேகுடும்பத்தைச்சேர்ந்த மூவர் கத்திவெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினமிரவு புத்தூர் கிழக்கு ஓடைப்பகுதியில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.இச் சம்பவத்தில் கடும் காயங்களுக்குள்ளான இதே இடத்தைச் சேர்ந்த இ.உதயகுமார்(வயது 32)யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிககப்பட்டுள்ளார்.

இவரது தாயாரான இ.ராசேஸ்வரி (வயது50)மற்றும் க.சோதிப்பிள்ளை (வயது60)ஆகியோர் வெட்டுக் காயத்திற்கு இலக்கான நிலையில் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (உ-69)

# க.கா.குழுவின் புதிய தலைவர் பிரபாவை இன்று சந்திப்பார்

(கிளிநொச்சி)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை இன்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடனான இச் சந்திப்பின் போது பதவி விலகிச் செல்லவுள்ள மேஜர் ஜெனரல் ரொண்பயுறு ஹெவ்டே உடனிருப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் திருமதி அடேல் பாலசிங்கம்,அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (வ)

## பரீட்சை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக வெளிவாரி வணிகமாணி பகுதி-1 பரீட்சைகள் இடம் பெறமாட்டாது என வெளிவாரிப்பிரிவு அறிவித்துள்ளது.

இப் பரீட்சைகள் இம் மாதம் 10ம் திகதி ஆரம்பமாகும் எனவும் புதிய பரீட்சை நேர அட்டவணையை வெளிவாரிப்பரீட்சைகள் அலகில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## பவளவிழா

(திருநெல்வேலி)

ஆனைக் கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய பவள விழா இன்று காலை 8.30மணிக்கு அதிபர் சூ.ஜெயவீரசிங்கம் தலைமையில் நடை பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான என்.ரவிராஜ், ஜீ.ஜீ.கஜேந்திரகுமார் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக ஆனைக்கோட்டை அரசியல் துறைப் பொறுப்பாளர் அன்பு, முன்னாள் மாவட்ட சுதேச மருத்துவப் பணிப்பாளர் உ.ரோமகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-43)

**யுனிசெவ்....**

ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அவ்வறிக்கையில் யுத்தத்தினால் பாதிப்படைந்த சிறுவர்களின் அபிவிருத்தி,செயலமர்வு,அதற்கான திட்டவரைவு குறித்து இம் மாத இறுதியில் மீண்டும் நடவடிக்கையில் ஈடுபடுவதெனவும் சிறுவர்களைப் படையில் சேர்த்துக் கொள்வதில்லைஎன்பதில் புலிகள் உறுதியாக உள்ளதெனறும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

**தமிழ் நாட்டு....**

இதேவேளை காயமடைநது தப்பியோடிய மீனவர்கள் இராமேஸ்வரத்தில் வைத்து தமிழகப்பொலஸாருக்கு தகவல் தெரிவிக்கையில், கடலில்நாம் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது கைக்குண்டுகளால் தாங்கள் தாக்கபபட்டுள்தாகவும் இதன் போதே தாம் காயமடைந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மன்னார் மீனவர்கள் தகவல் தருகையில், தமிழக மீனவர்கள் மன்னார்க் கடலில் அத்துமீறி நுழைவது குறித்து பலதடவைகள்மன்னார் பொலிஸாரிடமும் அரச அதிபரிடமும் தெரிவித்தோம்.

இருந்தும் அவர்கள் எந்த வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் மீனவர்களை பிடிக்க வேண்டிய தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்டதாகத் தெரிவத்தனர். (ம)


## பதவி வெற்றிடம்

கணனி இயக்குநர்கள் ஆண்கள்
(இரவுக் கடமை)
Page Maker,Typing தெரிந்தவர்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பங்களை 10.03.2003க்கு முன்னதாக;

ஆளணி முகாமையாளர்,
'வலம்புரி'
இல.15,வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

## அறிவித்தல்

எக்ஸ்போ ஏவியேஷன்
விமானப் பயணிகளின் வசதிக்கேற்ப புதிய கால நேர அட்டவணை
புறப்படும் நேரம்

| | | |
|---|---|---|
| திங்கள்,செவ்வாய்,சனி | - இரத்மலானை | - 08.00 |
| | யாழ்ப்பாணம் | - 10.00 |
| புதன்கிழமை | - இரத்மலானை | - 06.30 |
| | - யாழ்ப்பாணம் | - 08.15 |
| வெள்ளிக்கிழமை | - இரத்மலானை | - 10.45 |
| | - யாழ்ப்பாணம் | - 12.30 |

✿ 50 நிமிட சொகுசான பயணம். ✿ இலவச போக்குவரத்து யாழ்.–பலாலி–யாழ்.
கொட்டாஞ்சேனை – இரத்மலானை–கொட்டாஞ்சேனை
*குறிப்பு:புதன்,வெள்ளி ஆகிய தினங்களுக்கு பயணச்சீட்டு பெற்றுக் கொண்டவர்களும் கவனிக்கவும்*
மேலதிக தொடர்புகளுக்கு:
021–222 3891 071–348888
071–349999
(C/5824)


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.03.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.